مؤسسة الشيخ
محمد بن صالح العثيمين الخيرية
رحمه الله تعالى

# இஸ்லாமியக் கொள்கை பற்றிய சுருக்கமான ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

ஆக்கம் :
பேரறிஞர் அஷ்ஷைக்
**முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன் (ரஹ்)**
அல்லாஹ் அவரதும், அவரது பெற்றோரினதும், அனைத்து முஸ்லிம்களினதும் பாவங்களை மன்னிப்பானாக!

شركاء التنفيذ
جمعية
خدمة المحتوى الإسلامي
باللغات

بسم الله الرحمن الرحيم

அல்லாஹ் அவரதும், அவரது பெற்றோரினதும், அனைத்து முஸ்லிம்களினதும் பாவங்களை மன்னிப்பானாக!

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கிறேன்

# முன்னுரை

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே, அவனைப் போற்றி, அவனிடமே உதவியும் தேடுகிறோம், அவனிடமே பாவமன்னிப்புக்கோரி மீளுகிறோம், எமது உள்ளங்கள் மற்றும் செயற்களின் தீங்குகளிலிருந்து அவனிடமே பாதுகாப்புத் தேடுகிறோம். யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுகிறானோ அவரை வழிகெடுப்போன் யாருமில்லை. யாரை அவன் வழிதவறச்செய்கிறானோ அவரை நேர்வழி காட்டுவோன் யாரும் இல்லை. மேலும் அல்லாஹ் ஒருவனைத்தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு எந்த இணையாளருமில்லை என்று சாட்சி கூறுகிறேன். மற்றும், முஹம்மத் (ஸல்)அவர்கள் அவனின் அடியாரும் திருத்தூதருமாவார் எனவும் நான் சான்று பகர்கிறேன். நபியவர்களின் மீதும் அவர்களின் குடும்பத்தார் மற்றும் அவர்களின் தோழர்கள் மறுமை நாள்வரை அவர்களை நல்ல முறையில் பின்பற்றி நடப்போர் அனைவரின் மீதும் அல்லாஹ்வின் ஸலாதும் அவனின் ஸலாமும் உண்டாவதாக.

நிச்சயமாக ஓரிறைக் கொள்கை பற்றிய அறிவுதான் அனைத்து அறிவுகளிலும் மிகச் சிறந்ததாகும், மதிப்பு மிக்கதாகும், வேண்டப்படுவதில் மிக அவசியமானதுமாகும். ஏனெனில் அது அல்லாஹ்வையும், அவனது பெயர்கள்,

பண்புகள், மற்றும் அடியார்கள் அவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை அறிவதோடு சம்பந்தப்படுகிறது, அதுமாத்திரமின்றி இது அல்லாஹ்வின் பக்கம் செல்வதற்கான திறவுகோலாகவும், அவனது மார்க்க சட்டதிட்டங்களின் அஸ்திவாரமாகவுமுள்ளது.

இதனால்தான் அனைத்து இறைத்தூதர்களும் அதன்பால் அழைப்பு விடுப்பதில் ஒருமித்திருந்தனர். அல்லாஹ் கூறுகின்றான் : ''நிச்சயமாக என்னைத் தவிர ''உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் வேறு யாருமில்லை, ஆகவே என்னையே வணங்குங்கள்'' என (நபியே) நாம் உமக்கு முன்னர் எந்தத் தூதருக்கும் வஹி அறிவிக்காமல் அவரை நாம் அனுப்பியதில்லை''. (அல்அன்பியாஃ : 25) தான் தனித்தவனெனத் தனக்கு சான்று பகர்ந்துள்ளான், அவனது வானவர்களும் மற்றும் கல்வியாளர்களும் அவனுக்கு அதைக்கொண்டு சான்று பகர்ந்துள்ளனர். அல்லாஹ் கூறுகின்றான் : ''அல்லாஹ் நீதியை நிலைநாட்டக்கூடியவனாக உள்ள நிலையில் அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று சாட்சி கூறுகிறான். மேலும் மலக்குகளும் அறிவுடையோரும் (இவ்வாறே சாட்சி கூறுகின்றனர்.) அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை; அவன் மிகைத்தவன், ஞானமிக்கவன்''. (ஆல இம்ரான் : 18)

ஓரிறைக்கொள்கையின் இம்மகத்தான நிலையை உணர்ந்து ஒரு முஸ்லிம் தனது மார்க்கத்தைத் தூய்மையான அஸ்திவாரம், மன அமைதி, முழுமையான அடிபணிதல் போன்ற அம்சங்களின் மீது கட்டியெழுப்புவதற்காக அதனை (தௌஹீதை) கற்பதும், கற்பிப்பதும், சிந்திப்பதும் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது, அப்போதுதான் அதன் உயரிய

முடிவுகள், அதனால் கிடைக்கும் பலாபன்கள் மூலம் இம்மையிலும் மறுமையிலும் மகிழ்வுற முடியும்.

எல்லா விடயங்களிலும் நல்லதை தெரிவு செய்து ஈடேற்றத்தை அடைந்து கொள்ள உதவியாளனாய் அல்லாஹ்வே உள்ளான்.

நூலாசிரியர்.

.

## இஸ்லாமிய மார்க்கம்

இஸ்லாமிய மார்க்கம் : அல்லாஹ் இதனை முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கொடுத்தனுப்பி, இதன் மூலம் அனைத்து மதங்களுக்கும் முற்றுப் புள்ளிவைத்தான், தனது அடியார்களுக்கு அதனை முழுமைப்படுத்தி, அதன் மூலம் அவர்களுக்கு அருட்கொடைகளைப் பூரணமாக்கி, அதனை அவர்களுக்கு மார்க்கமாகவும் பொருந்திக்கொண்டான். எனவே, இதுவன்றி வேறெந்த மதத்தையும் யாரிடமிருந்தும் அவன் ஏற்க மாட்டான். அல்லாஹ் கூறுகின்றான் :

‘‘உங்களிலுள்ள ஆண்களில் எவருக்கும் முஹம்மது (நபி அவர்கள்) தந்தையாக இருக்கவில்லை. எனினும், அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களுக்கு (இறுதி) முத்திரையாகவும் இருக்கிறார். அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கிறான்’’.
(அஹ்ஸாப் : 40)

மேலும் அல்லாஹ் கூறுகிறான் :
‘‘இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு நான் முழுமைப்படுத்தி விட்டேன். எனது அருட்கொடைகளையும் உங்கள் மீது பூரணப்படுத்தி விட்டேன். மேலும் இஸ்லாத்தையே நான் உங்களுக்கு மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்’’. (மாஇதா : 3).

மேலும் அல்லாஹ் கூறுகிறான் : ‘‘நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் ஆகும்’’. (ஆல இம்ரான் : 19) மேலும் அல்லாஹ் கூறுகிறான் : ‘‘யார் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக எடுத்து நடக்க விரும்புகிறாரோ அது அவனிடமிருந்து அங்கீகரிக்கப்படமாட்டாது, அவன் மறுமையில் நஷ்டவாளர்களுள் உள்ளவராவார்’’. (ஆல இம்ரான் : 85) இம்மார்க்கத்தின் அடிப்படையில் வாழுவதையே அல்லாஹ் அனைத்து மக்கள் மீதும் கடமையாக்கியுள்ளான். நபி (ஸல்) அவர்களை விழித்து பின்வருமாறு அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘(நபியே நீர் கூறுவீராக. மனிதர்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்குமான அல்லாஹ்வின் தூதராவேன். வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அவனுக்கே உரியன (உண்மையாக) வணங்கப்படத்தகுதியானவன் அவனைத் தவிர வேறுயாருமில்லை. அவனே உயிர்ப்பிக்கிறான் அவனே மரணிக்கச்செய்கிறான். ஆகவே நீங்கள் அல்லாஹ்வையும் உம்மி நபியான அவனது தூதரையும் நம்பிக்கை கொள்ளுங்கள். அவரும் அல்லாஹ்வையும் அவனது வார்த்தைகளையும் நம்பிக்கை கொள்கிறார். நீங்கள் நேர் வழி பெறும் பொருட்டு அவரையே பின்பற்றுங்கள்’’. (அஃராப் : 158) நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) கூறினார்கள் : ‘‘முஹம்மதின் உயிர் எவனின் கைவசமுள்ளதோ அவன்மீது சத்தியமாக! இந்த சமுதாயத்திலுள்ள யூதரோ கிறிஸ்தவரோ யாரேனும் ஒருவர் என்னைப் பற்றிக் கேள்விப்பட்ட பிறகும் கூட நான் கொண்டுவந்ததை நம்பிக்கை கொள்ளாமல் இறந்துவிட்டால், அவர் நரகவாசிகளில் ஒருவராகவே இருப்பார்’’. (ஆதாரம் : முஸ்லிம்)

அன்னாரை நம்புவது என்பது வெறும் நம்பிக்கையுடன் மாத்திரமின்றி

ஏற்றுக்கொள்ளல், கட்டுப்படலுடன் கூடிய நம்பிக்கையாகும். இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்ததை உண்மைப்படுத்தி, அதுதான் சிறந்த மார்க்கம் என சாட்சி கூறியும் கூட அபூதாலிப் முஃமினாக இருக்கவில்லை.

இஸ்லாமிய மார்க்கம் முன்னைய மதங்கள் கொண்டிருந்த அனைத்து நலன்களையும் உள்ளடக்கியுள்ளதுடன், அனைத்து காலம், இடம், சமூகத்திற்கும் இது பொருத்தமான மார்க்கம் என்ற வகையில் பிற மதங்களை விட்டும் இது தனித்து நிற்கின்றது. அல்லாஹ் தனது தூதரரை விழித்து பின்வருமாறு கூறுகின்றான் : ‘‘மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் மிகைக்கக் கூடியதாகவும் இருக்கின்றது’’. (அல் மாஇதா : 48).

அனைத்து காலம், இடம், சமூகத்திற்கும் இது பொருந்தும் என்பதன் அர்த்தம், இதனைப் பின்பற்றுவது எக்காலத்திலும், எவ்விடத்திலும் சமூகத்தின் நலன்களுக்கு முரணாகாது, மாறாக அதைப்பின்பற்றுவதில்தான் அவர்களுக்கு நலன் இருக்கிறது, சிலர் நினைப்பது போன்று அனைத்து காலம், இடம், சமூகத்திற்கும் இது வளைந்து கொடுக்கும் என்பது அர்த்தமில்லை.

இஸ்லாமிய மார்க்கம் : அதனை உண்மையாகப் பற்றிப்பிடித்தோருக்கு அல்லாஹ் உதவுவதாகவும், ஏனையோரை விட மிகைக்கச் செய்வதாகவும் பொறுப்பேற்றுள்ளான். அல்லாஹ் கூறுகிறான் : ‘‘(இணை வைத்து வணங்கும்) முஷ்ரிக்குகள் வெறுத்த போதிலும், மற்ற எல்லா மார்க்கங்களையும் மிகைக்கும் பொருட்டு, அவனே தன் தூதரை நேர்வழியுடனும், சத்திய மார்க்கத்துடனும்

அனுப்பினான்'' (அஸ்ஸஃப் : 9). மேலும் அல்லாஹ் கூறுகிறான் : ''உங்களில் நம்பிக்கைகொண்டு நல்லறம் புரிந்தோருக்கு இவர்களுக்கு முன்னுள்ளோரை அதிபதிகளாக்கியது போன்று இவர்களை ஆக்குவதாகவும், இவர்களுக்காக அவன் பொறுந்திக் கொண்ட இவர்களது மார்க்கத்தை உறுதிப்படுத்துவதாகவும் இவர்களது அச்சத்திற்குப் பின்னர் பாதுகாப்பை இவர்களுக்கு ஏற்படுத்துவதாகவும் வாக்களிக்கிறான். இவர்கள் எனக்கு எதனையும் இணையாக்காது என்னையே வணங்குவார்கள் இதன் பின்னரும் யார் நிராகரிக்கிறார்களோ அவர்கள் தான் பாவிகள்''. (அந்நூர் : 55)

இஸ்லாமிய மார்க்கம் அடிப்படைக் கொள்கை, சட்டதிட்டங்கள் இரண்டையும் உள்ளடக்கியதாகும். அது தனது அடிப்படைக் கொள்கை, சட்டதிட்டங்கள் இரண்டிலும் முழுமையானதாகும் :

1. ஓரிறைக் கொள்கையை ஏவி, இணைவைப்பைத் தடுக்கின்றது.
2. உண்மையை ஏவி, பொய்யைத் தடுக்கின்றது.
3. நீதியை ஏவி, அநீதியைத் தடுக்கின்றது. நீதம் என்பது ஒரே மாதிரியானவற்றுக்கு மத்தியில் சமநிலையை கடைப்பிடிப்பதும், வேறுபாடானவற்றுக்கு மத்தியில் வித்தியாசப்படுத்திப் பார்ப்பதுமாகும். இஸ்லாம் சமத்துவத்தின் மார்க்கம் என்று கூறும்போது, சிலர் கூறுவது போல் அது பொதுப்படையான சமத்துவம் என விளங்குவது நீதமல்ல, ஏனெனில் வேறுபாடுள்ளவற்றுக்கு மத்தியில் சமத்துவப்படுத்துவது இஸ்லாம் காட்டாத அநீதியாகும். அவ்வாறு செய்பவர் பாராட்டுக்குரியவரும் அல்லர்.
4. அமானிதத்தை ஏவி, துரோகத்தைத் தடுக்கின்றது.
5. வாக்குறுதியை நிறைவேற்றுமாறு ஏவி, மோசடியைத் தடுக்கின்றது.

6. பெற்றோருக்கு உபகாரம் செய்வதை ஏவி, அவர்களைத் துன்புறுத்துவதைத் தடுக்கின்றது.
7. உறவினர்களுடன் சேர்ந்து நடக்குமாறு ஏவி, உறவைத் துண்டிப்பதைத் தடுக்கின்றது.
8. அயலவர்களை உபசரிப்பதை ஏவி, அவர்களுக்கு நோவினை செய்வதைத் தடுக்கின்றது.

சுருங்கக் கூறின் : இஸ்லாம் அனைத்து நற்குணங்களையும் ஏவி, அனைத்து தாழ்ந்த குணங்களை விட்டும் தடுக்கின்றது. அனைத்து நற்செயல்களையும் ஏவி, அனைத்து தீய செயல்களையும் தடுக்கின்றது.

அல்லாஹ் கூறுகிறான் : ''(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் நீதி செலுத்தும்படியாகவும், நன்மை செய்யும்படியாகவும், உறவினர்களுக்குப் (பொருள்) கொடுத்து உதவி செய்யும்படியாகவும் நிச்சயமாக அல்லாஹ் (உங்களை) ஏவுகிறான். மானக்கேடான காரியங்கள், பாவம், அநியாயம் ஆகியவற்றிலிருந்து (உங்களை) அவன் தடுக்கிறான். நீங்கள் நல்லுணர்வு பெறுவதற்காக அவன் உங்களுக்கு (இப்படி) நல்லுபதேசம் செய்கிறான்''. (அந் நஹ்லு: 90).

## இஸ்லாத்தின் அடிப்படைகள்

இஸ்லாத்தின் அடிப்படைகள் : இஸ்லாம் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் அடிப்படைகள் ஐந்தாகும் : அவை நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு

உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் நபிமொழியில் கூறப்பட்டுள்ளன. அவர்கள் கூறினார்கள் : ''இஸ்லாம் ஐந்து தூண்களின் மீது நிறுவப்பட்டுள்ளது. அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல். – அதாவது அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும்– முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், தூதரும் ஆவார்கள் என்றும் சான்று பகர்தல், தொழுகையை நிலைநாட்டுதல், ஸகாத் கொடுத்தல், ரமழான் மாதம் நோன்பு நோற்றல், ஹஜ் செய்தல் ஆகியவையாகும்''. அப்போது ஒரு மனிதர் ''ஹஜ் செய்தல், ரமழான் மாதம் நோன்பு நோற்றலா?'' என்று வினவ ''இல்லை, ரமழான் மாதம் நோன்பு நோற்றல், ஹஜ் செய்தல்'' இவ்வாறு தான் நான் நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன் என இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

1. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும்– முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், தூதரும் ஆவார்கள் என்றும் சான்று பகர்தல் என்பது இச்சாட்சியத்தை நாவினால் வெளிப்படுத்தும் விதத்திலான உறுதியான நம்பிக்கையாகும். இதனை உறுதியாக அவர் நம்புவதன் மூலம் அதனைக் காண்பவர் போன்றாகும். சான்று பகர வேண்டியவை இரண்டிருந்தும் இதனை ஒரே கடமையாக ஆக்கப்படக் காரணம் :

ஒன்றிருக்கில் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து எத்திவைப்பவர்கள், எனவே அன்னார் அவனது அடிமை, தூதர் என சாட்சியம் கூறுவது அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று சாட்சி கூறுவதன் முழு வடிவம் என்பதற்காகவாகும்.

அல்லது இவ்விரு சாட்சியங்களும்தான் நற்செயல்கள்

செல்லுபடியாகி, ஏற்கப்பட அடிப்படையாகும். ஏனெனில் அல்லாஹ்வுக்காக உளத்தூய்மையுடனும், நபிவழிக்கு உடன்பாடாகவும் செய்யப்படாத எந்தவொரு நற்செயலும் செல்லுபடியாகவோ, ஏற்கப்படவோ மாட்டாது.

அல்லாஹ்வுக்காக உளத்தூய்மையுடன் செய்யப்படும் போது அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்ற சாட்சியம் உறுதியாகிறது, நபிவழிக்கு உடன்படும் போது முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது தூதர் ஆவார்கள் என்ற சாட்சியம் உறுதியாகிறது.

படைப்பினங்களுக்கு அடிமையாகுவதிலிருந்தும், இறைத்தூதர்கள் அல்லாதோரைப் பின்பற்றுவதிலிருந்தும் உள்ளத்தையும், ஆன்மாவையும் விடுவிப்பது இந்த மகத்தான சாட்சியத்தின் பயன்களில் உள்ளதாகும்.

2. தொழுகையை நிலைநாட்டுதல் : இது தொழுகையை உரிய நேரத்தில், உரிய விதத்தில் தொடர்ந்து பூரணமாக நிறைவேற்றுவதன் மூலம் அல்லாஹ்வை வணங்குவதாகும்.

உள்ளம் விரிவடைதல், கண்குளிர்ச்சி, மானக்கேடான, தீய செயல்களைத் தடுத்தல் போன்றன இதன் பயன்களில் உள்ளதாகும்.

3. ஸகாத் வழங்கல் : இது ஸகாத் விதியாகும் குறித்த சொத்துக்களில் இருந்து கடமையானளவு செலவு செய்வதன் மூலம் அல்லாஹ்வை வணங்குவதாகும். கஞ்சத்தனம் போன்ற இழி குணங்களை விட்டும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துதல், இஸ்லாத்தினதும், முஸ்லிம்களினதும் தேவைகளை

நிறைவேற்றல் போன்றன இதன் பயன்களில் உள்ளதாகும்.

4. ரமழான் மாதம் நோன்பு நோற்றல் : இது ரமழான் மாத பகல் வேளையில் நோன்பை முறிக்கும் விடயங்களை விட்டும் தடுத்துக் கொள்வதன் மூலம் அல்லாஹ்வை வணங்குவதாகும்.

அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தும் நோக்கில், மனதுக்கு விருப்பமான அனுமதிக்கப்பட்டவற்றைக்கூட விட்டுவிட உள்ளத்தைப் பயிற்றுவித்தல் இதனால் கிடைக்கும் பயன்களில் ஒன்றாகும்.

5. அல்லாஹ்வின் மாளிகையை ஹஜ் செய்தல் : இது ஹஜ்ஜின் கிரியைகளை நிறைவேற்றுவதற்காக புனித கஃபாவை நாடிச் செல்வதன் மூலம் அல்லாஹ்வை வணங்குவதாகும்.

அல்லாஹ்வுக்கு வழிப்படுவதில் உடல், பொருள் ரீதியாக செலவு செய்ய உள்ளத்தைப் பயிற்றுவித்தல் இதனால் கிடைக்கும் பயன்களில் ஒன்றாகும். இதனால்தான் ஹஜ் அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளப்படும் அறப்போரின் ஒரு வகையாக உள்ளது.

இந்த அடிப்படைகளுக்கான நாம் கூறிய, கூறாத பயன்பாடுகள் தூய்மையான, பரிசுத்தமான, சத்திய மார்க்கத்தைப் பின்பற்றக்கூடிய, படைப்பினங்களுடன் நீதி, நேர்மையுடன் நடக்கக்கூடிய ஒரு இஸ்லாமிய சமுதாயமாக மனித சமூகத்தை மாற்றுகின்றன. ஏனெனில், இந்த அடிப்படைகள் சீராகுவதின் மூலம் இஸ்லாமிய சட்டதிட்டங்களின் ஏனைய அம்சங்கள்

சீராகின்றன, இச்சமூகத்தின் நிலமைகள் அதன் மார்க்க விடயங்கள் சீராவதன் மூலம் சீராகும். மார்க்க விடயங்களில் ஏற்படும் குறைகளின் அளவு அச்சமூகத்தின் நிலமைகளிலும் குறைகள் ஏற்படும். இதனைத் தெளிவாக விளங்க விரும்புவோர் பின்வரும் இறைவசனத்தை ஓதிப்பார்க்கவும் : ‘‘நிச்சயமாக அவ்வூர்வாசிகள் ஈமான் கொண்டு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்திருந்தால், நாம் அவர்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் – பரகத்துகளை – பாக்கியங்களைத் திறந்து விட்டிருப்போம், ஆனால் அவர்கள் (நபிமார்களை நம்பாது) பொய்ப்பித்தனர், ஆகவே அவர்கள் செய்து கொண்டிருந்த (பாவத்)தின் காரணமாக நாம் அவர்களைப் பிடித்தோம். அவ்வூர்வாசிகள் இரவில் தூங்கிக்கொண்டிருக்கும் போதே, நமது வேதனை அவர்களை வந்து அடையாது என பயமில்லாமல் இருக்கின்றார்களா? அல்லது அவ்வூர் வாசிகள் (கவலையில்லாது) பகலில் விளையாடிக்கொண்டிருக்கும் போதே, நமது வேதனை அவர்களையடையாது என பயமில்லாமல் இருக்கின்றார்களா? அல்லாஹ்வின் சூழ்ச்சியிலிருந்து அவர்கள் அச்சம் தீர்ந்து விட்டார்களா? நஷ்டவாளிகளான மக்களை தவிர, வேறு எவரும் அல்லாஹ்வின் சூழ்ச்சியிலிருந்து அச்சம் தீர்ந்து இருக்க மாட்டார்கள்’’. (அல்அஃராப் : 96-99).

மேலும் முன்சென்றோரின் வரலாற்றைப் படிக்கவும், ஏனெனில் வரலாறு புத்தியுள்ளோருக்குப் படிப்பினையாகும். மேலும், யாருடைய இதயம் திரையால் மூடப்படவில்லையோ, அவர்களுக்கு தெளிவான நுண்ணறிவுமாகும். அல்லாஹ்வே போதுமானவன்.

## இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகள்

நாம் ஏற்கனவே தெளிவுபடுத்தியது போன்று இஸ்லாமிய மார்க்கம் அடிப்படைக் கொள்கை, சட்டதிட்டங்கள் இரண்டையும் உள்ளடக்கியதாகும். அதன் சட்டதிட்டங்களில் சிலதை சுட்டிக்காட்டி அதன் அடிப்படைகளாகக் கணிக்கப்படும் பிரதான தூண்களையும் கூறினோம்.

இஸ்லாமிய (அகீதா) கொள்கையின் பிரதான அடிப்படை விடயங்கள் : அல்லாஹ்வையும், அவனது மலக்குகள், வேதங்கள், தூதர்கள், மறுமை நாள், நன்மை தீமை அனைத்தும் அவனின் ஏற்பாட்டில்தான் என்ற விதியையும் நம்பிக்கை கொள்வதாகும்.

இந்த அடிப்படைகள் பற்றி அல்குர்ஆன், ஸுன்னா இரண்டிலும் கூறப்பட்டுள்ளன.

அல்லாஹ் தனது வேதத்தில் கூறுகின்றான் : ''கிழக்கு மேற்குப் பக்கம் உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது (மட்டும்) நன்மையாகாது. மாறாக அல்லாஹ்வையும் இறுதி நாளையும் வானவர்களையும் வேதங்களையும் நபிமார்களையும் ஈமான் கொள்வது நன்மையான விடயமாகும்''. (அல்பகரா : 177).

விதி பற்றி பின்வருமாறு கூறுகின்றான் : ''நாம் ஒவ்வொரு பொருளையும் நிச்சயமாக (குறிப்பான) அளவின்படியே படைத்திருக்கின்றோம். நம்முடைய கட்டளை (நிறைவேறுவது) கண் மூடி விழிப்பது போன்ற ஒன்றே அன்றி வேறில்லை''. (அல்கமர் : 49, 50). ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி

(ஸல்) அவர்களிடம் ஈமான் பற்றிக் கேட்ட போது நபி (ஸல்) அவர்கள் கூறிய பதில் ஹதீஸில் இடம்பெற்றுள்ளது : ''ஈமான் என்பது அல்லாஹ்வையும் அவனின் மலக்குகளையும் அவனது வேதங்களையும் அவனது தூதர்களையும் மறுமை நாளையும் நன்மை தீமைகள் அனைத்து அல்லாஹ்வின் விதிப்படி நடைபெறும் என்பதையும் விசுவாசம் கொள்வதாகும்'' என்று கூறினார்கள்.

## அல்லாஹ்வை நம்புதல் ( ஈமான் கொள்ளுதல்)

அல்லாஹ்வை ஈமான் கொள்ளுதல் நான்கு விடயங்களை உள்ளடக்குகின்றது :

**முதலாவது வியடம் : அல்லாஹ்வின் இருப்பை நம்புதல் :**

இயற்கை சுபாவம், பகுத்தறிவு, மார்க்கம், உணர்வு ஆகிய அனைத்தும் அல்லாஹ்வின் இருப்பை அறிவிக்கின்றன.

1. அல்லாஹ்வின் இருப்பை இயற்கை உணர்வு அறிவிக்கும் முறையானது : ஒவ்வொரு படைப்பும் சிந்திக்காமல், கற்றுக்கொல்லாமல் அவற்றை படைத்த ஒருவன் இருக்கிறான் என்று நம்பிக்கை கொள்ளும் சுபாவத்திலேயே படைக்கப் பட்டுள்ளன. அவ்வுள்ளங்களில் இயற்கைச்சுபாவத்திற்கு மாற்றமான சிந்தனைகள் ஊடுருவாத வரை அவை அந் நம்பிக்கையிலே வளர்கின்றன. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ''ஒவ்வொரு பிறப்பும் (படைத்தவன் அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளும்) சுபாவத்திலேயே பிறக்கின்றன. எனினும் அவர்களது பெற்றோர்கள் தான் அவர்களை யூதர்களாகவும், நஸாராக்களாகவும், நெருப்பு வணங்கிகளாகவும் மாற்றுகின்றனர்''.

2. (தற்போதுள்ள) இந்தப் படைப்புகள், முன் உண்டான படைப்புகள், இதற்கு பின்னர் படைக்கப்பட இருப்பவைகள் அனைத்திற்கும் படைத்தவன் ஒருவன் இருப்பது அவசியமே, ஏனெனில் எந்த ஒரு பொருளும் தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ளவோ அல்லது இயற்கையாகத் திடீரென உண்டாகவோ முடியாது.

ஏனெனில் எந்தவொன்றும் தன்னைத் தானே படைக்காது! அது உருவாக முன் இல்லாமை என்ற நிலையிலிருந்து கொண்டு எவ்வாறு படைப்பாளனாக மாற முடியும்?!

இயற்கையாகத் திடீரென உருவாகவும் முடியாது, ஏனெனில் புதிதாக உருவாகும் ஒவ்வொரு பொருளுக்கும் உருவாக்குபவன் ஒருவன் அவசியம் என்பது நியதியாகும். இந்த அற்புதமான ஒழுங்கில், பொருத்தமான இணக்கமாக அமைந்துள்ள அதன் இருப்பு, காரண காரணிகளுக்கிடையிலும், உயிரினங்களில் ஒன்றுக்கொன்றுக்கு இடையிலும் உள்ள ஒத்திசைவான இணைப்பு அவற்றின் இருப்பு ஒரு தற்செயலாக உருவான இயற்கை நிகழ்வாக இது இருப்பதை அடியோடு மறுக்கின்றன, ஏனெனில் எதேச்சையாக உருவான ஒன்று அதன் உருவாக்கத்திலேயே ஒரே ஒழுங்கிலில்லாத பட்சத்தில் அது தொடர்ந்து நிலைத்து, முன்னேற்றமடையும் போது ஒரே ஒழுங்கில் எவ்வாறு இருக்க முடியும்?!

இந்தப் படைப்புகள் தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ளவோ அல்லது இயற்கையாகவே உண்டாகவோ முடியாது எனும் போது அவற்றை உருவாக்கிய ஒருவன் இருந்தே ஆக வேண்டுமென்பது அவசியமாகிறது.

அவன்தான் அகிலத்தாரைப் படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ்வாகும்.

ஸூரா தூரில் இதற்கான பகுத்தறிவு ரீதியான, உறுதியான ஆதாரத்தைக் கூறியுள்ளான் : அல்லது, அவர்கள் எப்பொருளுமின்றி (தாமகாவே) படைக்கப்பட்டு விட்டனரா? அல்லது இவர்கள் தம்மைத்தாமே படைத்துக் கொண்டனரா? (அத்தூர் : 35) அதாவது படைப்பாளனின்றி அவர்கள் படைக்கப்படவுமில்லை, தம்மைத் தாமே அவர்கள் படைத்துக் கொள்ளவுமில்லை, எனவே அவர்களைப் படைத்தவன் அல்லாஹ்தான் என்பது உறுதியாகி விட்டது. இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் ஸூரா தூரை ஓதும் போது செவிமடுத்துக் கொண்டிருந்த ஜுபைர் பின் முத்இம் (ரலி) அவர்கள், ''அல்லது, அவர்கள் எப்பொருளுமின்றி (தாமகாவே) படைக்கப்பட்டு விட்டனரா? அல்லது இவர்கள் தம்மைத்தாமே படைத்துக் கொண்டனரா?, அல்லது, வானங்களையும் பூமியையும் அவர்கள்தான் படைத்தார்களா? அல்ல! (இவைகளையெல்லாம் படைத்தவன் அல்லாஹ்தான்! அவனை) இவர்கள் உறுதி கொள்ள மாட்டார்கள். அல்லது, அவர்களிடம் உம்முடைய இறைவனின் பொக்கிஷங்கள் இருக்கின்றனவா? அல்லது இவர்கள் தாம் (எல்லாவற்றையும்) அடக்கியாள்பவர்களா?'' ஆகிய இந்த வசனங்களை அடைந்த போது : (அத்தூர் : 35-37)

இணைவைப்பாளராக இருந்த ஜுபைர் பின் முத்இம் (ரலி) அவர்கள் ''எனது இதயம் பறந்து விடும் போலிருந்தது, அதுதான் முதன்முதலில் எனது உள்ளத்தில் ஈமான் தோன்றிய சந்தர்ப்பமாகும்'' எனக் கூறினார்கள்.

இதனைத் தெளிவுபடுத்தும் உதாரணமொன்றைக் கவனிப்போம் :

தோட்டங்கள் சூழ்ந்துள்ள, இடையே ஆறுகள் ஓடக்கூடிய, பலவித கட்டில்கள், விரிப்புகள் நிரப்பப்பட்டுள்ள, தேவையான, முழுமைப்படுத்தக்கூடிய அத்தனைவித அலங்காரங்களாலும் அலங்கரிக்கப் பட்ட ஓர் அரண்மனையைப் பற்றி ஒருவர் கூறுகின்றார் என வைத்துக் கொள்வோம், இந்த மாளிகை, மற்றும் அதிலுள்ள அனைத்து அலங்காரங்களும் தம்மைத்தாமே உருவாக்கிக்கொண்டன, அல்லது உருவாக்கியவனின்றி தற்செயலாகவே உருவாகின என அவர் உம்மிடம் கூறினால் உடனடியாக அதனை மறுத்து, அவரைப் பொய்ப்பித்து விடுவீர், அறிவீனமான கூற்றாக இதனைக் கணிப்பீர். இதற்கும் பின்னரும், வானம், பூமி, கோள்கள், பிரமிக்க வைக்கும் அற்புதமான ஒழுங்குடன் கூடிய இப்பிரமாண்டமான பிரபஞ்சம் தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ளவோ, அல்லது தற்செயலாக உருவாகவோ முடியுமா?! 3. அல்லாஹ்வின் இருப்பை மார்க்கம் அறிவிக்கும் முறையானது : அனைத்து இறைவேதங்களும் அதனைக் கூறுகின்றன. அவை கொண்டு வந்த படைப்பினங்களின் அனைத்து நலன்களையும் உள்ளடக்கிய, நீதமான சட்டதிட்டங்களாவன, தனது படைப்பினங்களின் தேவைகளை மிக அறிந்த, மதிநுட்பமுள்ள இரட்சகனிடமிருந்துதான் அவை வந்துள்ளன என்பதற்கு தெளிவான ஆதாரமாக இருக்கின்றன. மேலும் நம் கண்களால் காணும் யதார்த்தம் உண்மையென சாட்சி சொல்லும் இவ்வேதங்கள் கூறியுள்ள உலக செய்திகளும், தான் அறிவித்துள்ள விடயங்களை உருவாக்க சக்தியுள்ள இரட்சகனிடமிருந்துதான் அவை வந்துள்ளன என்பதற்கு தெளிவான ஆதாரமாக இருக்கின்றன.

4. உணர்வுகளும் இறைவன் ஒருவன் உள்ளான் என்பதற்கு சான்றாக இரண்டு விதங்களில் அமைகின்றன :

முதலாவது : பிராத்திப்பவனின் பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுவது, கஷ்டத்திற்குள்ளானவர்களுக்கு உதவியளிக்கப்படுவது போன்ற விடயங்களை நாம் பார்த்தும் கேட்டும் வருகின்றோம். இவையும் அல்லாஹ் இருக்கின்றான் என்பதை திட்டவட்டமாக எமக்குணர்த்தவே செய்கின்றன. அல்லாஹ் கூறுகின்றான் : ''இன்னும், நூஹ் – அவர் முன்னே பிரார்த்தித்தபோது, அவருக்கு (அவருடைய பிரார்த்தனையை ஏற்று) பதில் கூறினோம்''. (அல்அன்பியாஃ : 76). மேலும் அல்லாஹ் கூறுகிறான் : ''உங்கள் இறைவனிடம் நீங்கள் உதவி தேடி இரைஞ்சிய போது (உங்களுக்கு உதவுவதாக) அவன் உங்களுக்கு பதிலளித்ததை நீங்கள் நினைவுகொள்ளுங்கள்''. (அல்அன்பால் : 9).

ஜும்ஆ நாளில் நபி (ஸல்) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தபோது ஒரு கிராமவாசி நுழைந்து, 'இறைத்தூதர் அவர்களே! செல்வங்கள் அழிந்துவிட்டன. குழந்தை குட்டிகள் பசியால் வாடுகின்றனர். எனவே எங்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்று கூறினார். உடனே நபி(ஸல்) அவர்கள் இரண்டு கைகளையும் உயர்த்தி பிரார்த்தித்தார்கள், அப்போது மலைகளைப் போல் மேகங்கள் திரண்டு வந்தன. நபி (ஸல்) அவர்கள் மிம்பரிலிருந்து இறங்குவதற்குள்ளாக மழை கொட்டி அவர்களின் தாடியிலிருந்து வழிந்ததை நான் பார்த்தேன் என அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கும் செய்தி ஸஹீஹுல் புஹாரியில் இடம் பெற்றுள்ளது.

மறு ஜும்ஆவில் அதே கிராமவாசி அல்லது வேறொருவர் எழுந்து 'இறைத்தூதர் அவர்களே! கட்டிடங்கள் இடிந்து விழுகின்றன, செல்வங்கள் மூழ்குகின்றன, எனவே எங்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்

என்றார். நபி (ஸல்) அவர்கள் தங்களின் கைகளை உயர்த்தி ‘இறைவா! எங்கள் சுற்றுப் புறங்களை நோக்கி (இதை அனுப்புவாயாக!) எங்களுக்குக் கேடாக (இம்மழையை) ஆக்கி விடாதே!” என்று கூறினார்கள். மேகம் உள்ள பகுதியை நோக்கி நபி(ஸல்) அவர்கள் சைகை செய்த போதெல்லாம் அம்மேகம் விலகிச் சென்றது.

அல்லாஹ்விடம் உண்மையாக ஒதுங்கி, பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகளைப் பேணி பிரார்த்திப்போருக்கு பதிலளிக்கப்படுவதை இன்றும் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

இரண்டாவது : நபிமார்களுக்கு கொடுக்கப்பட்ட முஃஜிஸாத் எனும் அற்புதங்கள், இவற்றை அப்போதைய மக்கள் கண்டார்கள், கேள்விப்பட்டுமிருக்கிறார்கள். இது போன்ற தெளிவான அத்தாட்சிகள் அவற்றை அனுப்பிய அல்லாஹ் இருக்கிறான் என்பதை எமக்குணர்த்தச்செய்கின்றன. ஏனெனில் இவை மனித சக்திக்கு அப்பாற்பட்டவையாகவே இருக்கின்றன, நபிமார்களைப் பலப்படுத்தி அவர்களுக்கு உதவி செய்யவே இவற்றை அல்லாஹ் நிகழ்த்திக்காட்டுகிறான்.

உதாரணமாக, மூஸா (அலை) அவர்களுக்கு தனது தடியால் கடலில் அடிக்குமாறு அல்லாஹ் பணித்த போது அது பன்னிரண்டு வரண்ட பாதைகளாகப் பிளந்த அத்தாட்சியைக் கூறலாம். ஒவ்வொரு பாதைக்கும் இடையே தண்ணீர் மலை போன்று உயரத்தில் இருந்தது. அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘ஆகவே, நாம் மூஸாவை நோக்கி “ நீர் உமது தடியினால் இந்தக் கடலை அடிப்பீராக” என வஹ்யி அறிவித்தோம். (அவர் அடிக்கவே) அது (பல வழிகளாகப்) பிளந்துவிட்டது. ஒவ்வொரு பிளவும் பெரும் மலைகளைப்போல் இருந்தது’’. (அஷ்ஷுஅரா

: 63). மற்றுமோர் உதாரணம் : ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அனுமதியின்படி மரித்தவர்களை உயிர்ப்பித்து, மண்ணறைகளிலிருந்து அவர்களை வெளியேற்றிய அத்தாட்சியையும் கூறலாம். இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான் : ''அல்லாஹ்வின் அனுமதியுடன் மரித்தவர்களை நான் உயிர்ப்பிக்கின்றேன்''. (ஆல இம்ரான் : 49) மேலும் அல்லாஹ் கூறுகிறான் : ''எனது அனுமதியுடன் மரித்தவர்களை நீர் உயிர்ப்பிக்கின்றீர்''. (அல்மாஇதா : 110). மூன்றாவது உதாரணம் : முஹம்மத் (ஸல்) அவர்களிடம் குரைஷியர் அற்புதமொன்றை நிகழ்த்திக் காட்டுமாறு கோரிய போது அன்னார் சந்திரனைச் சுட்டிக்காட்டினார்கள், அது இரண்டாகப் பிளந்தது, மக்களும் அதனைக் கண்டனர். இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: ''(இறுதி) நேரம் நெருங்கி விட்டது, சந்திரனும் பிளந்து விட்டது, எனினும், அவர்கள் ஓர் அத்தாட்சியைப் பார்த்தால், (அதைப்) புறக்கணித்து விடுகிறார்கள், ''இது வழமையாக நடைபெறும் சூனியம் தான்'' என்றும் கூறுகிறார்கள்''. (அல்கமர் : 1, 2).

தனது தூதர்களைப் பலப்படுத்தவும், அவர்களுக்கு உதவவும் அல்லாஹ் நிகழ்த்திக்காட்டிய இந்த உணர முடியுமான அத்தாட்சிகள் அல்லாஹ்வின் இருப்பை உறுதியாக அறிவித்து நிற்கின்றன.

அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதில் உட்பொதிந்துள்ள இரண்டாவது விடயம் : அவனது பரிபாலனத்துவத்தை நம்புதலாகும், அதாவது படைத்துப் பரிபாலிப்பவன் அவன் ஒருவன் மாத்திரம்தான், அதில் அவனுக்கு இணையாளனோ, துணையாளனோ இல்லை என நம்பிக்கை கொள்ளலாகும். ரப்பு எனும் அரபு வார்த்தை படைப்பாற்றல், அதிகாரம், கட்டளை பிரப்பித்தல் அனைத்தும் ஒருங்கிணைந்த ஒருவனுக்கே பயன்படுத்தப்படும். எனவே

படைப்பாளன் அவனைத்தவிர யாருமில்லை, ஆட்சியதிகாரமுள்ளவன் அவனைத்தவிர யாருமில்லை, அவனுக்கே கட்டளை பிரப்பிக்கும் முழு அதிகாரம் உண்டு. அல்லாஹ் கூறுகின்றான் : ''படைத்தலும் கட்டளையிடுதலும் அவனுக்கே உரியது என்பதை அறிந்து கொள்ளுங்கள்''. (அல்அஃராப் : 54). மேலும் அல்லாஹ் கூறுகிறான் ''அவனே உங்கள் இரட்சகனாகிய அல்லாஹ். அவனுக்கே முழு அதிகாரமும் உள்ளது. அவனையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள், ஒரு வித்தின் (மேலிருக்கும்) தொலி அளவும் அதிகாரம் பெறமாட்டார்கள். (ஃபாதிர் : 13).

பெருமையடித்து, தான் கூறுவதை உள்ளத்தால் நம்பிக்கை கொள்ளாதவனைத் தவிர வேறு யாரும் அல்லாஹ்வின் பரிபாலணக் கோட்பாட்டை மறுத்ததாக வரலாற்றில் அறியப்படவில்லை, பிர்அவ்ன் தனது சமூகத்திற்கு ''நான்தான் உங்கள் உயர்ந்த இறைவன்'' (அந்நாஸிஆத் : 24) என்றும், ''என்னைத் தவிர உங்களுக்கு வேறு இறைவனை நான் அறியவில்லை'' (அல்கஸஸ் : 38) என்றும் கூறியதைப்போன்று, இது உள்ளத்திலுள்ள நம்பிக்கையின் படி அமையவில்லை

அல்லாஹ் கூறுகின்றான் : ''அவர்களுடைய உள்ளங்கள் அவற்றை (உண்மையென) உறுதி கொண்ட போதிலும், அநியாயமாகவும், பெருமை கொண்டவர்களாகவும் அவர்கள் அவற்றை மறுத்தார்கள்''. (அந்நம்லு : 14). மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னுக்குக் கூறியதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ''(அதற்கு) மூஸா ''வானங்களையும் பூமியையும் படைத்த இறைவனைத் தவிர (வேறு யாரும்) இவற்றைத் தெளிவான சான்றுகளாக அனுப்பவில்லை என்பதை நிச்சயமாக நீ அறிவாய், பிர்அவ்னே! நிச்சயமாக

நீ அழிக்கப்பட இருக்கிறாய் என்று உன்னைப் பற்றி நான் எண்ணுகின்றேன்'' என்று கூறினார்''. (அல்இஸ்ராஃ : 102).

இதனால்தான் மக்கா நகர் இணைவைப்பாளர்கள் அல்லாஹ்வின் இறைமையில் அவனுக்கு இணைவைக்கும் நிலையிலும், அவனது பரிபாலனக் கோட்பாட்டை ஏற்கக்கூடியவர்களாக இருந்தனர். அல்லாஹ் கூறுகின்றான் :

''நீங்கள் அறிந்திருந்தால், இப் பூமியும் இதிலுள்ளவர்களும் யாருக்குச் சொந்தம்?'' என்று (நபியே!) நீர் கேட்பீராக!. ''அல்லாஹ்வுக்கே'' என்று அவர்கள் கூறுவார்கள்; ''(அவ்வாறாயின் இதை நினைவிற்கொண்டு) நீங்கள் நல்லுணர்வு பெறமாட்டீர்களா?'' என்று கூறுவீராக!. ''ஏழு வானங்களுக்கு இறைவனும் மகத்தான அர்ஷுக்கு இறைவனும் யார்?'' என்றும் கேட்பீராக. ''அல்லாஹ்வே'' என்று அவர்கள் சொல்வார்கள்; ''(அவ்வாறாயின்) நீங்கள் அவனுக்கு அஞ்சி இருக்கமாட்டீர்களா?'' என்று கூறுவீராக!. மேலும், அவர்களிடம் கேளுங்கள்: ''உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள். ஒவ்வொரு பொருளின்மீதுள்ள அதிகாரமும் யாருடைய கைவசம் இருக்கின்றது என்றும் மேலும், அனைவருக்கும் அபயம் அளிப்பவனும் எவராலும் அபயம் அளிக்கப்பட முடியாதவனும் யார் என்றும்!. அதற்கவர்கள் ''(இது) அல்லாஹ்வுக்கே (உரியது)'' என்று கூறுவார்கள். ((அவ்வாறாயின்) நீங்கள் ஏன் மதி மயங்குகிறீர்கள்?'' என்று கேட்பீராக''. (அல்முஃமினூன் : 84-89).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: ''வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார் என்று அவர்களிடம் கேட்டால் (யாவையும்) மிகைத்தவன், நன்கறிகிறவன் (ஆகிய அல்லாஹ்) தான் அவைகளை

படைத்தான் என்று நிச்சயமாக அவர்கள் உறுதியாக பதில் கூறுவார்கள்''. (அஸ்ஸுஃஹ்ருப் : 9) மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: ''மேலும், அவர்களிடம் யார் அவர்களைப் படைத்தது என்று நீர் கேட்டால் ''அல்லாஹ்'' என்றே அவர்கள் நிச்சயமாக கூறுவார்கள்; அவ்வாறிக்கும் போது (அவனைவிட்டு) அவர்கள் எங்கு திருப்பப்படுகிறார்கள்?''. (அஸ்ஸுஹ்ருப் : 87) அல்லாஹ்வின் கட்டளை என்பது உலக, மற்றும் மார்க்க கட்டளைகள் அனைத்தையும் உள்ளடக்கக்கூடியதாகும், அவன் பிரபஞ்சத்தை நிர்வகித்து, அதில் தான் நாடியதைத் தனது மதிநுட்பத்திற்கு ஏற்ப தீர்மானிப்பது போன்றே, அவன் தனது மதிநுட்பத்திற்கு ஏற்ப வணக்க வழிபாடுகள், கொடுக்கல், வாங்கல் சட்டங்களையும் தீர்ப்புச் செய்பவனாக உள்ளான். அல்லாஹ்வுடன் வணக்கங்களை உருவாக்கக் கூடிய, கொடுக்கல் வாங்கல் சட்டங்களைத் தீர்மானிக்கக் கூடிய வேறொருவரை யார் எடுக்கின்றாரோ அவர் ஈமானை முறையாக நிலைநாட்டாமல் அல்லாஹ்வுக்கு இணைவைத்தவறாகின்றார்.

அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதில் உட்பொதிந்துள்ள மூன்றாவது விடயம் : அவனது இறைமையை நம்புதலாகும், அதாவது அவன் ஒருவன்தான் உண்மையான வணங்கப்படத் தகுதியானவன், அவனுக்கு எந்த இணையாளனும் கிடையாது என்பதாகும். இலாஹ் எனும் அரபு வார்த்தையின் அர்த்தம் அல்லாஹ் நேசத்துடனும், கண்ணியத்துடனும் வணங்கப்படக் கூடியவன் என்பதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் : ''மேலும், உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான், அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடையோனாகிய அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை''. (பகரா : 163). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''அல்லாஹ் நீதியை நிலைநாட்டக்கூடியவனாக உள்ள நிலையில் அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று

சாட்சி கூறுகிறான். மேலும் மலக்குகளும் அறிவுடையோரும் (இவ்வாறே சாட்சி கூறுகின்றனர்.) அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை; அவன் மிகைத்தவன், ஞானமிக்கவன்''. (ஆல இம்ரான் : 18). அல்லாஹ்வுடன் அவனல்லாது வணங்கப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட அனைத்து கடவுள்களின் இறைமையும் பொய்யான இறைமையாகும். அல்லாஹ் கூறுகின்றான் : ''நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மையானவன். நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையன்றி (இறைவனென) அழைப்பவை யாவும் பொய்யானவை ஆகும் (என்பதும்) நிச்சயமாக அல்லாஹ்தான் உயர்ந்தவன், (மேலானவன்,) மகா பெரியவன் (என்பதும் இதற்குக் காரணமாகும்)''. (அல்ஹஜ் : 62). அவற்றுக்கு கடவுள்கள் எனப்பெயர் சூட்டுவதால் மாத்திரம் அவற்றுக்கு உண்மையான இறைமையை வழங்கிடாது. லாத், உஸ்ஸா, மனாத் போன்ற அவர்களுடைய கடவுள்களைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ''இவையெல்லாம்;நீங்களும் உங்கள் மூதாதையர்களும் வைத்துக் கொண்டவெறும் பெயர்களன்றி வேறில்லை இதற்கு அல்லாஹ் எந்த அத்தாட்சியையும் இறக்கவில்லை''. (அந்நஜ்ம் : 23). ஹூத் (அலை) தனது சமூகத்திற்குக் கூறியதாக அல்லாஹ் கூறுகின்றான் : ''அல்லாஹ் எந்தவோர் ஆதாரத்தையும் இறக்கி வைக்காத, நீங்களும் உங்களுடைய முன்னோர்களும் பெயர் சூட்டிக் கொண்டீர்களே அந்த பெயர்கள் விஷயத்திலேயா என்னிடத்திலே நீங்கள் தர்க்கம் செய்கிறீர்கள்''. (அல்அஃராப் : 71). யூஸுப் (அலை) சிறைத் தோழர்கள் இருவருக்கும் கூறியதாக அல்லாஹ் கூறுகின்றான் : ''சிறைக்கூடத்தில் இருக்கும் என்னிரு தோழர்களே! (யாதொருசக்தியுமற்ற) வெவ்வேறு தெய்வங்கள் நன்றா? அல்லது அனைவரையும் அடக்கி ஆளுகின்ற ஒரே இறைவனாகிய அல்லாஹ் ஒருவனே நன்றா?. அவனையன்றி நீங்கள் வணங்கிக்கொண்டிருப்பவை யாவும் நீங்களும் உங்கள் மூதாதையரும் வைத்துக்

கொண்ட (வெறும் கற்பனைப்) பெயர்களேயன்றி வேறில்லை, அவற்றுக்கு அல்லாஹ் யாதொரு ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை''. (யூஸுப் : 39, 40). இதனால்தான் இறைத்தூதர்கள் தமது சமூகத்திற்குப் பின்வருமாறு கூறக்கூடியவர்களாக இருந்தார்கள் : ''என் கூட்டத்தாரே! அல்லாஹ்வையே வணங்குங்கள், உங்களுக்கு அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை''. (அல்அஃராப் : 59) இருப்பினும் இணைவைப்பாளர்கள் அதனை மறுத்து, அல்லாஹ்வுடன் அவனல்லாதோரை வணங்கி உதவியும் பாதுகாப்பும் தேடும் கடவுல்களை எடுத்துக் கொண்டனர்

இணைவைப்பாளர்கள் தங்கள் கடவுள்களாக இவற்றை எடுத்துக் கொண்டதை இரண்டு பகுத்தறிவு ஆதாராங்கள் மூலம் அல்லாஹ் பொய்ப்பித்துள்ளான் :

முதலாவது : அவர்கள் எடுத்துக் கொண்ட இந்தக் கடவுள்களிடம் இறைமைக்குரிய எந்தவொரு சிறப்பம்சங்களும் இல்லை, இவை படைக்கப்பட்டவையே தவிர படைக்கக் கூடியவையல்ல, தம்மை வணங்குவோருக்கு எந்த பயனையும் அளிக்கவும் முடியாது, எந்தத் தீங்கையும் தடுக்கவும் முடியாது, அவர்களுக்கு உயிர்கொடுக்கவோ, மரணிக்கச் செய்யவோ முடியாது, வானங்களில் உள்ள எதுவும் அவர்களுக்கு சொந்தமுமில்லை, அதில் அவர்களுக்கு எந்தப் பங்குமில்லை.

அல்லாஹ் கூறுகின்றான் : ''அல்லாஹ் அல்லாதவற்றை தெய்வங்களாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அவையோ (அல்லாஹ்வினால்) படைக்கப்பட்டவை, எதையும் அவை படைக்கவில்லை, எவ்வித நன்மையையும் தீமையையும் தங்களுக்கு செய்து கொள்ள அவை சக்தியற்றவை,

உயிர்ப்பிக்கவோ, மரணிக்க வைக்கவோ, உயிர் கொடுத்து எழுப்பவோ அவை சக்திபெற மாட்டா''. (அல்ஃபுர்கான் : 3).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''அல்லாஹ்வையன்றி எவரை நீங்கள் (தெய்வங்களென) எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ அவர்களை அழையுங்கள்; வானங்களிலோ, இன்னும் பூமியிலோ அவர்களுக்கு ஓர் அணுவளவும் அதிகாரமில்லை – அவற்றில் இவர்களுக்கு எத்தகைய பங்கும் இல்லை – இன்னும் அவனுக்கு உதவியாளர்களும் அவர்களில் யாருமில்லை, மேலும், யாருக்கு அவன் அனுமதி அழித்தானோ அவருக்குத் தவிர அவனிடத்தில் பரிந்துரை பயனளிக்காது''. (ஸபஃ : 22, 23). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''எப்பொருளையும் படைக்காதவற்றை அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணையாக்குகின்றனரா? அவர்களும் (அவனால்) படைக்கப்பட்டவர்களே!. அவர்கள் இவர்களுக்கு எத்தகைய உதவியும் செய்ய சக்தியற்றவர்களாக இருக்கின்றனர், ஏன் தமக்குத்தாமே உதவி செய்யும் நிலையில்கூட அவர்கள் இல்லை''. (அல்அஃராப் : 191, 192).

அக் கடவுள்களின் நிலையே இதுவென்றால், அவற்றைக் கடவுள்களாக எடுப்பது எவ்வளவு பெரிய அறிவீனமாகவும் பொய்யாகவும் இருக்கிறது!.

இரண்டாவது : இந்த இணைவைப்பாளர்கள் அல்லாஹ் ஒருவன் மாத்திரம்தான் படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகன், அவனிடமே அனைத்து வஸ்த்துக்களின் அதிகாரமும் உண்டு, அவன்தான் பாதுகாப்பவன், அவனை ஒருவரும் பாதுகாப்பதில்லை என்பவற்றை ஏற்றுக் கொண்டுதான் இருந்தார்கள். இது அவர்கள் அல்லாஹ்வின் பரிபாலனத்தில் அவனை ஒருமைப்படுத்தியது

போன்றே இறைமையிலும் அவனை ஒருமைப்படுத்துவதைக் அவர்களுக்குக் கட்டாயமாக்குகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : ''மனிதர்களே! உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தவர்களையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள், (அதனால்) நீங்கள் இறை அச்சமுடையவர்களாக ஆகலாம். அவனே பூமியை நீங்கள் வசிக்கும் இடமாகவும், வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து, மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து, அதைக் கொண்டு (நீங்கள்) புசிக்கக்கூடிய கனிவர்க்கங்களையும் உங்களுக்கு வெளியாக்குகிறான். ஆகவே, (இவற்றையெல்லாம்) நீங்கள் தெளிவாக அறிந்துகொண்டே அல்லாஹ்வுக்கு இணைகளை ஆக்காதீர்கள்''(அல்பகரா : 21, 22).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''மேலும், அவர்களிடம் யார் அவர்களைப் படைத்தது என்று நீர் கேட்டால் ''அல்லாஹ்'' என்றே அவர்கள் நிச்சயமாக கூறுவார்கள்; அவ்வாறிக்கும் போது (அவனைவிட்டு) அவர்கள் எங்கு திருப்பப்படுகிறார்கள்?''. (அஸ்ஸுஃக்ருப் : 87).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''உங்களுக்கு வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உணவளிப்பவன் யார்? செவிப்புலனையும், பார்வைகளையும் சொந்தமாக்கிக் கொண்டிருப்பவன் யார்?'' இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? (அகிலங்களின் அனைத்துக்) காரியங்களையும் திட்டமிட்டுச் செயல்படுத்துபவன் யார்?'' என்று(நபியே!) நீர் கேளும். உடனே அவர்கள் ''அல்லாஹ்'' என பதிலளிப்பார்கள்; ''அவ்வாறாயின் அவனிடம் நீங்கள் பயபக்தியுடன் இருக்க வேண்டாமா?'' என்று நீர் கேட்பீராக. உண்மையாகவே அவன் தான் உங்களைப் படைத்துப் பாதுகாக்கும் அல்லாஹ்,

இந்த உண்மைக்குப் பின்னரும் (நீங்கள் அவனை வணங்காவிட்டால்) அது வழிகேட்டைத் தவிர வேறில்லை; (இப்பேருண்மையை விட்டு) நீங்கள் எங்கு திருப்பப்படுகிறீர்கள்?. (யூனுஸ் : 31, 32).

அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதில் உட்பொதிந்துள்ள நான்காவது விடயம் : அவனது பெயர்கள் மற்றும் பண்புகளை நம்புவதாகும்.

அதாவது, அல்லாஹ் தனக்கு எப்பெயர்களையும் பண்புகளையும் தனது அல்குர்ஆனிலும், நபி (ஸல்) அவர்களின் பொன்மொழிகளிலும் இருப்பதாகக்கூறியுள்ளானோ அவற்றை அவனுக்குத்தகுந்த விதத்தில் அவ்வாறே ஈமான் கொள்வதாகும். அவற்றில் எவ்வித கருத்துமாற்றமோ, பாழ்படுத்தலோ, (அவற்றிற்கு) வடிவம் கொடுத்தலோ, உவமை கற்பித்தலோ செய்யாமல் அப்படியே ஏற்றுக்கொள்வது கடமையாகும். அல்லாஹ் கூறுகின்றான் : ''அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன, அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள், அவனுடைய திருநாமங்களை தவறாக பயன்படுத்துவோர்களை (புறக்கணித்து) விட்டு விடுங்கள் – அவர்களுடைய செயல்களுக்காக அவர்கள் (தக்க) கூலி கொடுக்கப்படுவார்கள்''. (அல்அஃராப் : 180).

''வானங்களிலும், பூமியிலும் மிக்க மேலான வர்ணனை (பண்பு) அவனுக்குரியதே, மேலும், அவனே (யாவற்றையும்) மிகைத்தவன், தீர்க்கமான அறிவுடையவன்.''. (அர்ரூம் : 27).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''அவனைப் போன்று எப்பொருளும் இல்லை, அவனே (யாவற்றையும்) செவியேற்கிறவன், பார்க்கிறவன்''. (அஷ்

ஷூரா : 11)

இவ்விடயத்தில் இரு பிரிவினர் வழிதவறிச் சென்றுள்ளனர் :

முதல் பிரிவினர் : (முஅத்திலாக்கள்) அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளை அவனுக்கு இருப்பதாகக் கூறுவது அவனைப் படைப்பினங்களுக்கு ஒப்பாக்குவதாக நினைத்து அவையனைத்தையுமோ, அல்லது சிலவற்றையோ மறுப்போர். இவ்வெண்ணம் பல விதங்களில் தவறாகும் :

1. இது அல்லாஹ்வின் வார்த்தையில் முரண்பாடுள்ளது போன்ற தவறான பாத்திரங்களை வேண்டி நிற்கின்றது, ஏனெனில் அல்லாஹ் தனக்கு பெயர்கள், பண்புகள் உள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளான். அவனைப் போன்று எப்பொருளும் இருப்பதையும் மறுத்துள்ளான். அப்பெயர்கள், பண்புகளை உறுதிப்படுத்துவது உவமையை ஏற்படுத்துமெனில் அல்லாஹ்வின் வார்த்தையில் முரண்பாடுள்ளதாகி விடும், ஒன்றையொன்று பொய்ப்பிப்பதாகவும் ஆகி விடும்.

2. பெயரிலோ, பண்பிலோ இரு பொருட்கள் ஒன்றுபட்டிருப்பதால் அவ்விரண்டும் யதார்த்தத்திலும் ஒன்றாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. கேட்கக்கூடிய, பார்க்கக்கூடிய, பேசக்கூடிய விடயங்களில் ஒன்றுபடும் இரு மனிதர்களை நீர் காண்கிறீர், இதன் மூலம் மனித பண்புகளில், செவிமடுத்தல், பார்வை, பேச்சு என்பவற்றில் அவ்விருவரும் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

கைகள், கால்கள், கண்களைக் கொண்ட விலங்குகளையும் நீர் காண்கிறார், அவை மனிதனுடன் ஒன்றுபட்டிருப்பதால் அவற்றின் கைகள், கால்கள், கண்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்பதில்லை.

பெயர்கள், பண்புகளில் ஒன்றாக இருக்கும் படைப்பினங்களுக்கு மத்தியிலேயே வேற்றுமை தென்பட்டால் படைத்தவனுக்கும், படைப்பினங்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமை மிக மிகத் தெளிவானது, பாரியது.

இரண்டாவது பிரிவினர் : (முஷப்பிஹாக்கள்) அல்லாஹ் அடியார்களை அவர்கள் புரியும் விதத்திலேயே விழிக்கின்றான், எனவே இறைவசனங்கள், நபிமொழிகளில் கூறப்பட்டுள்ள அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் படைப்பினங்களுக்கு ஒப்பாவதையே வேண்டி நிற்கின்றன என நினைத்து அல்லாஹ்வைப் படைப்பினங்களுக்கு ஒப்பாக்குவோர். இவ்வெண்ணமும் பல விதங்களில் தவறாகும் :

1. அல்லாஹ் படைப்பினங்களுக்கு ஒப்பாகுதல் என்பது மார்க்கமோ, பகுத்தறிவோ ஏற்காத விடயமாகும். இறைவசனங்கள், நபிமொழிகள் வேண்டி நிற்கும் அம்சம் தவறான ஒன்றாக இருக்கவே முடியாது.
2. அல்லாஹ் அடிப்படைக் கருத்தில் அடியார்கள் புரியும் விதத்திலேயே அவர்களுடன் உரையாடியுள்ளான். இருப்பினும் அல்லாஹ்வின் பெயர், பண்புகள் விடயத்தில் அக்கருத்து கொண்டிருக்கும் யாதர்த்தம், உண்மைத் தோற்றம் அல்லாஹ் மாத்திரம் அறிந்து வைத்துள்ள விடயமாகும்.

அல்லாஹ் தான் செவிமடுப்பவன் எனக் கூறினால் செவியேற்றல் என்பது கேட்கும் திறனாகுமென்பது அடிப்படை அர்த்தமாகும். இருப்பினும் அல்லாஹ் எவ்வாறு கேட்கிறான் என்பது அறியப்படாத விடயமாகும், ஏனெனில் கேட்கும் திறன் படைப்பினங்களுக்கு மத்தியிலேயே வேறுபடுகின்றது, எனவே படைத்தவனுக்கும், படைப்பினங்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமை மிக

மிகத் தெளிவானதும், பாரியதுமாகும்.

அல்லாஹ் தன்னைப் பற்றி அர்ஷின் மேல் உயர்ந்து விட்டான் எனக் கூறினால் இங்கு உயர்ந்து விட்டான் என்பதன் அர்த்தம் தெளிவானதாகும், இருப்பினும் அல்லாஹ் அர்ஷின் மேல் உயர்ந்து விட்டான் என்பதன் யதார்த்தம் எம்மைப் பொறுத்தவரை அறியப்படாததாகும். ஏனெனில் உயர்தல் என்பதன் யதார்த்தம் படைப்பினங்களுக்கு இடையிலேயே வேறுபடுகின்றது. அசையாத ஒரு கதிரையில் அமர்தல் என்பது ஓடும் ஒட்டகத்தில் சிரமப்பட்டு அமர்வதைப்போன்றல்ல. படைப்பினங்களுக்கு மத்தியிலேயே இதில் வேற்றுமை தென்பட்டால் படைத்தவனுக்கும், படைப்பினங்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமை மிக மிகத் தெளிவானதும், பாரியதுமாகும்.

நாம் கூறிய பிரகாரம் அல்லாஹ்வை நம்புவதால் விசுவாசிகளுக்கு பல மகத்தான பயன்கள் கிடைக்கின்றன, அவற்றில் சில :

முதலாவது : அல்லாஹ் அல்லாதோரை ஆதரவு வைக்காமல், அஞ்சாமல், வணங்காமல் ஓரிறைக் கொள்கை உறுதியாகுதல்.

இரண்டாவது : அல்லாஹ்வை முழுமையாக நேசித்து, அவனது அழகிய திருநாமங்கள், உயர்ந்த பண்புகளுக்கமைய அவனை மகத்துவப்படுத்தல்.

மூன்றாவது : அவன் ஏவியதைச் செய்து, விலக்கியதைத் தவிர்ப்பதன் மூலம் அவனை வணங்குவதை உறுதிப்படுத்தல்.

## மலக்குமார்களை விசுவாசம் கொள்ளல்.

மலக்குகள் என்போர் அல்லாஹ்வை வணங்கக்கூடிய, படைக்கப்பட்ட, மறைவான உலகத்தினராகும். பரிபாலனத்தினலோ, இறைமையிலோ அவர்களுக்கு எந்தத் தன்மையும் இல்லை, அல்லாஹ் அவர்களை ஒளியினால் படைத்துள்ளான், அவனது கட்டளைக்கு முழுமையாக அடிபணிந்து, அமுல்படுத்தும் சக்தியை அவர்களுக்குக் கொடுத்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : ''மேலும் அவனிடம் இருப்பவர்கள் அவனுக்கு வணங்குவதை விட்டும் பெருமையடிக்க மாட்டார்கள், சோர்வடையவுமாட்டார்கள். இடைவிடாமல் அவர்கள் இரவிலும், பகலிலும் அவனைத் துதித்துக் கொண்டே இருக்கிறார்கள்''. (அல்அன்பியாஃ : 19, 20).

அவர்கள் அதிக எண்ணிக்கை கொண்டவர்கள், அவர்களது தொகையை அல்லாஹ்வைத் தவிர யாரும் மட்டிட முடியாது. புஹாரி, முஸ்லிமில் இடம்பெறும் அனஸ் (ரலி) அறிவிக்கக் கூடிய செய்தியில் ''நபி (ஸல்) அவர்களுக்கு வானிலுள்ள பைதுல் மஃமூர் எனும் மாளிகை உயர்த்திக் காட்டப்பட்டதாகவும், அதில் தினமும் எழுபதாயிரம் மலக்குகள் தொழுவதாகவும், அவர்கள் வெளியேறி விட்டால் மீண்டும் அடுத்த வாய்ப்புக் கிடைத்து அங்கு செல்ல மாட்டார்கள் என நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

மலக்குகளை நம்புவதென்பது நான்கு விடயங்களை உட்பொதிந்துள்ளது :

1. அவர்களது இருப்பை நம்புதல்.

2. ஜிப்ரீல் (அலை) போன்று, அவர்களது பெயர்களில் நாம் அறிந்தவற்றை பெயர்களுடனும், பெயர் அறியாதோரைப் பொதுவாகவும் நம்புதல்.

3. ஜிப்ரீல் (அலை) அவர்களின் தோற்றத்தைப் போன்று, அவர்களது தோற்றங்களில் நாம் அறிந்தவற்றை நம்புதல். ஜிப்ரீலை அவர்களது உண்மைத் தோற்றத்தில் நபி ஸல் அவர்கள் கண்டதாகவும், வானை அடைக்குமளவு அவர்களுக்கு அறுநூறு இறக்கைகள் இருப்பதாகவும் நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் ஒரு மலக்கு சிலவேலை மனித தோற்றமெடுப்பார். ஜிப்ரீல் (அலை) அவர்களை மர்யம் (அலை) அவர்களிடம் அல்லாஹ் அனுப்பிய போது அவர்கள் சராசரி மனித தோற்றமெடுத்துச் சென்றார்கள். நபி (ஸல்) தமது தோழர்களுடன் அமர்ந்திருந்த வேளை அன்னாரிடம் ஜிப்ரீல் (அலை) மிகைத்த வெண்மை நிற ஆடையுடனும், மிகைத்த கருமை நிறத்துடனான தலைமுடியுடனும் கூடிய ஒரு மனிதரின் தோற்றத்தில் வந்தார்கள். பயணம் செய்ததற்கான அறிகுறிகள் எதுவும் அவரிடம் காணப்படவில்லை. தோழர்களில் யாருக்கும் அவரைத் தெரியாது. அவர் நடந்து சென்று நபி (ஸல்) அவர்களின் முன் அமர்ந்தார். அவரது முழங்கால்களை நபி (ஸல்) அவர்களின் முழங்கால்களுடன் சேர்த்தும் இரு கைகளைக் தனது கால்களின் மீது வைத்தும் அமர்ந்தார். பின்னர் நபி (ஸல்) அவர்களிடம் இஸ்லாம், ஈமான், இஹ்ஸான், மறுமை, அதன் அறிகுறிகள் என்பவற்றைப் பற்றி வினவ, நபியவர்களும் பதிலளிக்க, அவரும் சென்று விட்டார். பின்னர் நபி (ஸல்) அவர்கள் ‘‘இவர் ஜிப்ரீல் (அலை), உங்களது மார்க்கத்தை உங்களுக்குக் கற்றுத்தர வந்தார்கள்’’ எனக் கூறினார்கள்.

அதேபோன்றுதான் இப்ராஹீம் (அலை), லூத் (அலை) ஆகியோரிடம் வந்த மலக்குகளும் மனித தோற்றத்திலேயே இருந்தனர்.

4. மலக்குகளை நம்புவதில் உட்பொதிந்துள்ள நான்காவது விடயம் : அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் அவர்கள் மேற்கொள்கின்ற செயற்பாடுகளில் நாம் அறிந்தவற்றை நம்புதல். உதாரணமாக அவனைத் துதித்தல், சடைவின்றி, இடைவிடாமல் இரவு, பகலாக அவனை வணங்குதல் போன்றவற்றைக் கூறலாம். அவர்களில் சிலருக்குப் பிரத்தியேகமான பணிகள் இருக்கின்றன.

உதாரணமாக : இறை வஹியின் நம்பிக்கையாளரான ஜிப்ரீல் (அலை) அவர்கள் எல்லா தூதர்களுக்கும் இறைக்கட்டளைகளை கொண்டு செல்லும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தார்கள்.

மழை, பயிர்களுக்கு : மீகாயீல் (அலை) அவர்கள் சாட்டப்பட்டுள்ளார்கள்.

இறுதி நாளின் போதும், படைப்பினங்களை மீளெழுப்பவும் ஸூர் ஊத இஸ்ராபீல் (அலை) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

உயிர்களைக் கைப்பற்றும் பொறுப்புக்கு மலகுல் மௌத் அவர்கள் சாட்டப்பட்டுள்ளார்கள்.

நரகத்திற்குப் பொறுப்பாக மாலிக் (அலை) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள், அவர்தான் நரகின் காவலாளியாகும்.

மேலும் தாயின் கருவறையில் உள்ள சிசுவுக்குப் பொறுப்பாக சில மலக்குகள் உள்ளனர். கருவறையில் நான்கு மாதங்கள் முழுமை பெற்றுவிட்டால் அச்சிசுவின் வாழ்வாதார அளவு, ஆயுட்காலம், செயற்பாடுகள், அவன் பாக்கியசாலியா? துர்ப்பாக்கியசாலியா? என்பவற்றை எழுதக் கட்டளை பிறப்பித்து அல்லாஹ் ஒரு மலக்கை அனுப்புகின்றான்.

மனிதர்களது செயல்களை கண்காணிக்கவும், எழுதவும் நியமிக்கப்பட்ட மலக்குகள், ஒவ்வொரு மனிதனது வலதிலும், இடதிலும் இரு மலக்குகள் இருப்பர்.

ஒருவர் மரணித்தால் அவர் பற்றிய விடயங்களை விசாரிப்பதற்காகவும் இரண்டு பேர் சாட்டப்பட்டுள்ளனர். அம்மனிதன் அடக்கம் செய்யப்பட்டதும் அவ்விருவரும் அவரிடத்தில் தனது இறைவன், மார்க்கம், நபி பற்றி விசாரிப்பார்கள்.

மலக்குகளை ஈமான் கொள்வதால் மகத்தான பல பயன்கள் கிடைக்கின்றன, அவற்றில் சில :

1. அல்லாஹ்வின் வல்லமையையும், ஆற்றலையும், அதிகாரத்தையும் அறிய முடிகிறது. படைப்புகளின் ஆற்றல் அவற்றை படைத்தவனின் ஆற்றலையே உணர்த்துகிறது.
2. மனிதர்களது விடயத்தில் அல்லாஹ் செலுத்தும் விஷேட கவனிப்புக்காக அவனுக்கு நன்றி செலுத்தத் தூண்டுகிறது. மனிதர்களை கண்காணித்து, அவர்களது செயல்பாடுகளை குறித்து, அவர்களது பிற நலன்களிலும் கவனம் செலுத்ததுவதற்காக அவனே மலக்குகளை நியமித்துள்ளான்.
3. அவர்கள் அல்லாஹ்வை வணங்கும் விதத்தைப் பார்த்து அவர்கள் மீது அன்பு ஏற்படுகிறது.

வழிதவறிய ஒரு குழுவினர், மலக்குகள் உடலமைப்பைக் கொண்டவர்களல்லர் எனக் கூறுகின்றனர். அவர்கள் படைப்பினங்களில் மறைந்துள்ள சிறந்த சக்திகளின் மறுவடிவம் மாத்திரமே என்கின்றனர். ஆனால்

இது அல்குர்ஆனையும், ஸுன்னாவையும், அனைத்து முஸ்லிம்களின் கருத்துக்களையும் பொய்ப்படுத்துவதாக அமைகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் : ''வானங்களையும், பூமியையும் படைத்து, இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்னான்கும் இறக்கை உள்ளவர்களாக மலக்குகளைத் தன் தூதை எடுத்துச் செல்வோராக ஆக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்''. (ஃபாதிர் : 1).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''வானவர்கள் நிராகரிப்பவர்களின் உயிர்களைக் கைப்பற்றும் சமயத்தில், அவர்களின் முகங்களிலும் முதுகுகளிலும் அடிப்பதை (நபியே!) நீர் பார்க்க வேண்டாமா?''. (அல்அன்ஃபால் : 50).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''இந்த அநியாயக்காரர்கள் மரண வேதனையில் இருக்கும் போது நீங்கள் அவர்களைப் பார்த்தால், மலக்குகள் தம் கைகளை நீட்டி (இவர்களிடம்) ''உங்களுடைய உயிர்களை வெளியேற்றுங்கள்'' (என்று கூறுவதை நீர் காண்பீர்).''. (அல்அன்ஆம் : 93).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''எனவே (நியாய விசாரணைக்கு நிற்கும்) அவர்களின் இருதயங்களிலிருந்து திடுக்கம் நீக்கப்படுமானால் (அவர்களில் ஒருவர் மற்றவர்களிடம்,) உங்கள் இரட்சகன் என்ன கூறினான்?'' என்று கேட்பார்கள். (அதற்கு மற்றவர்கள்,) ''உண்மையையே கூறினான். அவனோ மிக்க உயர்ந்தவன், மிகப்பெரியவன்'' என்றும் கூறுவார்கள்.'' (ஸபஃ : 23).

மேலும் அல்லாஹ் சுவனவாதிகள் விடயத்தில் கூறுகின்றான் : ‘‘மலக்குகள் ஒவ்வொரு வாயில் வழியாகவும் இவர்களிடம் வருவார்கள். ‘‘நீங்கள் பொறுமையைக் கடைப்பிடித்ததற்காக ‘‘ஸலாமுன் அலைக்கும்’’ (உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக!) உங்களுடைய இறுதி வீடு மிகவும் நல்லதாயிற்று!’’ (என்று கூறுவார்கள்.)’’. (அர்ரஃது : 23, 24).

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கும் செய்தி புஹாரியில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : ‘‘ஒரு அடியானை அல்லாஹ் நேசித்துவிட்டால் ஜிப்ரீல் (அலை) அவர்களை அழைத்து, ‘அல்லாஹ் இன்னாரை நேசிக்கிறான். எனவே, நீங்களும் அவரை நேசியுங்கள்!’ என்று கூறுவான். எனவே, ஜிப்ரீல் (அலை) அவர்கள்அவரை நேசிப்பதோடு விண்ணகத்தில் வசிப்பவர்களிடம், ‘அல்லாஹ் இன்னாரை நேசிக்கிறான்; நீங்களும் அவரை நேசியுங்கள்” என்று அறிவிப்பார்கள். உடனே, விண்ணக்கத்தாரும் அவரை நேசிப்பார்கள். பிறகு அவருக்கு பூமியிலும் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது”.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கும் மற்றுமொரு செய்தியும் புஹாரியில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : ‘‘ஜும்ஆ நாள் (வெள்ளிக்கிழமை) வந்துவிட்டால் வானவர்கள் (ஜும்ஆ தொழுகை நடக்கும்) பள்ளிவாசலின் ஒவ்வொரு வாசலிலும் இருந்த வண்ணம் முதன் முதலாக உள்ளே நுழைபவரையும் அடுத்தடுத்து வருவோரையும் (அவர்களின் பெயர்களை) எழுதிப் பதிவு செய்து கொண்டிருப்பார்கள். இமாம், மிம்பர் மேடையில் அமர்ந்துவிட்டால் (பதிவு செய்யும்) ஏடுகளைச் சுருட்டி வைத்துவிட்டு அவரின் உபதேச உரையைச் செவிமடுத்த வண்ணம் உள்ளே வருவார்கள்”.

மேற்கண்ட வசனத்தொடர்களெல்லாம் மலக்குமார்கள், வழிகேடர்கள் கூறுவதைப் போன்று உள்ரங்கமான சக்திகளல்ல, மாறாக வெளிப்படையான உடலமைப்பைக் கொண்டவர்கள் என்பதை தெளிவாக அறிவிக்கின்றன. இக்கருத்தில் அனைத்து முஸ்லிம்களும் ஒருமித்துள்ளனர்.

## வேதங்களை விசுவாசம் கொள்ளல்

வேதங்களைக் குறிக்கும் அரபு வார்த்தையான குதுப் என்பது கிதாப் என்ற சொல்லின் பன்மையாகும், எழுதப்பட்டது என்பதே இதன் அர்த்தமாகும். இங்கு வேதங்கள் என்பது : படைப்பினங்கள் ஈருலகிலும் வெற்றியடையும் பொருட்டு, அவர்களது நேர்வழிக்காகவும், அருளுக்காகவும் அல்லாஹ் தனது தூதர்களுக்கு இறக்கிய தொகுப்புகளாகும்.

வேதங்களை நம்புவது நான்கு விடயங்களை உள்ளடக்கியிருக்கிறது :

1. இவை அல்லாஹ்விடமிருந்து உண்மையாகவே இறங்கியவை என நம்புதல்.
2. அவற்றில் நாம் பெயர் அறிந்தவற்றை அந்தப் பெயர்களுடன் நம்ப வேண்டும். உதாரணமாக : அல்குர்ஆன் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும், தெளராத் வேதம் மூஸா (அலை) அவர்களுக்கும், இன்ஜீல் வேதம் ஈஸா (அலை) அவர்களுக்கும், ஸபூர் வேதம் தாவுத் (அலை) அவர்களுக்கும் அருளப்பட்டன என குறிப்பாகவும், ஏனைய பெயர் அறியாதவற்றை பொதுவாகவும் ஈமான் கொள்ள வேண்டும்.
3. அவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளில் ஆதாரபூர்வமானவற்றை உண்மை என ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்குர்ஆனின் தகவல்களையும், அதற்கு முன்னருள்ள வேதங்களின் தகவல்கள் திருத்தப்படாமலோ,

மாற்றப்படாமலோ இருப்பின் அவற்றையும் உண்மை என ஏற்க வேண்டும்.

4. அது கூறக்கூடிய சட்டங்களை பின்னர் (அச்சட்டங்கள்) மாற்றப்படாமல் இருப்பின் அவற்றை செயல்படுத்த வேண்டும். மேலும் அச்சட்டங்களின் நோக்கம் நமக்கு புரிந்தாலும், புரியாவிடினும் அவற்றை உள்ளத்தால் பொருந்தி பூரணமாக அவற்றிற்கு கட்டுப்படவும் வேண்டும். முந்தைய அனைத்து வேதங்களும் அல்குர்ஆனின் வருகையால் மாற்றப்பட்டே உள்ளன. இதனை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது : அல்லாஹ் கூறுகின்றான் : ''மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது''. (அல்மாஇதா : 48). அதாவது : அவைகள் மீது தீர்ப்பு வழங்க கூடியதாக இருக்கின்றது.

எனவே, முன்னைய வேதங்களின் எந்தவொரு சட்டத்தையும் அது ஆதாரபூர்வமானதாகவோ, அல்குர்ஆன் அங்கீகரிக்கும் பட்சத்தில்தான் அதனை அமுல்படுத்த முடியும்.

வேதங்களை ஈமான் கொள்வதால் மகத்தான பல பயன்கள் கிடைக்கின்றன, அவற்றில் சில :

1. அல்லாஹ் தன் அடியார்கள் மீது எவ்வளவு கரிசனையோடு இருக்கிறான் என்பதை இது உணர்த்தி நிற்கிறது. ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் நேர்வழி காட்ட அவ்வப்போது அவன் வேதங்களை இறக்கியிருப்பதன் மூலம் இதனைத்தெளிவாக புரிய முடிகின்றது.
2. அவன் இயற்றிய ஷரீஆவின் மூலம் அவனது மதிநுட்பத்தை

அறிந்து கொள்ள முடிகின்றது. ஒவ்வொரு சமூகத்திற்கும் அவர்களது நிலமைகளுக்கு பொருத்தமாக மார்க்கச்சட்டங்களை இயற்றியிருப்பதின் மூலம் இதனைத்தெளிவாக புரிய முடிகின்றது. இதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ''உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்''. (அல்மாஇதா : 48).

3. இவ்விடயத்தில் அல்லாஹ்வின் அருளுக்கு நன்றி செலுத்துதல்.

## இறைத்தூதர்களை நம்புதல் (ஈமான் கொள்ளல்)

தூதர்களைக் குறிக்கும் ''ருஸுல்'' எனும் அரபு வார்த்தை ''ரஸூல்'' என்பதன் பன்மையாகும். ஒன்றை எத்திவைப்பதற்காக அனுப்பப் பட்டவர் என்பதே இதன் அர்த்தமாகும்.

இங்கு தூதர் என நாடப்படுபவர், மார்க்கம் கொடுக்கப்பட்டு, அதனை எத்திவைக்கும் படி ஏவப்படுபவராகும்.

இதன் பிரகாரம், முதலாவது தூதர் நூஹ் (அலை), இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) ஆகியோராகும்.

அல்லாஹ் கூறுகின்றான் : ''(நபியே!) நூஹுக்கும், அவருக்குப் பின் வந்த நபிமார்களுக்கும் நாம் வஹீ அறிவித்தது போலவே, உமக்கும் நிச்சயமாக வஹீ அறிவித்தோம்''. (அல்மாஇதா : 163).

ஷபாஅத் தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கும் செய்தி புஹாரியில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : தமக்காக அல்லாஹ்விடம் பரிந்துரைக்க வேண்டி நபி ஆதம் (அலை) அவர்களிடம் மக்கள் வருவார்கள். அப்போது அவர் பின்வாங்கி விட்டு ''அல்லாஹ் அனுப்பிய முதல் தூதர் நூஹிடம் செல்லுங்கள்'' எனக் கூறுவதாக நபியவர்கள் கூறியுள்ளார்கள். (இது நீண்ட ஹதீதின் சிறிய பகுதியாகும்) மேலும் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் விடயத்தில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ''முஹம்மத் அவர்கள் உங்களது ஆண்களில் எவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. எனினும் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களின் முத்திரையாகவும் இருக்கின்றார்கள்''. (அல்அஹ்ஸாப் : 40). தனித்துவமான மார்க்கம் கொடுக்கப்பட்ட எந்த தூதரோ, முன்னைய மார்க்கத்தைப் புதுப்பிக்க இறைச்செய்தி அறிவிக்கப்பட்ட எந்த நபியோ இல்லாமல் எச்சமூகமும் இருந்ததில்லை. அல்லாஹ் கூறுகின்றான் : ''அல்லாஹ்வை வணங்குங்கள், மேலும் (அல்லாஹ் அல்லாது வணங்கப்படும்) தாகூத்தை விட்டு விலகிக்கொள்ளுங்கள் எனக் கூறும் தூதரை ஒவ்வொரு சமூகத்திற்கும் அனுப்பினோம்'' (அந்நஹ்ல் : 36).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் வராத எந்த சமுதாயத்தவரும் (பூமியில்) இல்லை''. (ஃபாதிர் : 24).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''நிச்சயமாக நாம் தாம் தவ்ராதை இறக்கி வைத்தோம்; அதில் நேர்வழியும் பேரொளியும் இருந்தன. (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் வழிப்பட்ட நபிமார்கள், யூதர்களுக்கு அதனைக் கொண்டே (மார்க்கக்) கட்டளையிட்டு வந்தார்கள்''. (அல்மாஇதா : 44).

இறைத்தூதர்கள் அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட மனிதர்களே, பரிபாலணக் கோட்பாடு, இறைமை போன்ற எந்தவொரு தனித்துவமும் அவர்களுக்கில்லை. இறைத்தூதர்களின் தலைவரான, அல்லாஹ்விடம் மிக கண்ணியத்திற்குரியவரான தனது நபி முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ‘‘(மேலும், நபியே) நீர் கூறுவீராக: “அல்லாஹ் நாடினாலே தவிர நான் எனக்கு ஒரு நன்மையையோ தீமையையோ செய்து கொள்ள சக்தி பெறமாட்டேன். நான் மறைவானவற்றை நான் அறிந்தவனாக இருந்திருந்தால், நன்மைகளையே அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன், தீமை என்னைத் தொட்டிருக்காது, நான் விசுவாசங்கொண்ட சமுதாயத்தினருக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயங் கூறுபவனுமேயன்றி வேறில்லை”. (அல்அஃராப் : 188).

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘(நபியே) நீர் கூறுவீராக: ‘‘நிச்சயமாக நான் உங்களுக்கு நன்மையோ, தீமையோ, செய்ய சக்தி பெற மாட்டேன்.’’ மேலும் கூறுவீராக : ‘‘நிச்சயமாக அல்லாஹ்வின் பிடியிலிருந்து எவராலும் என்னைக் காப்பாற்ற முடியாது. மேலும், அவனைத் தவிர வேறு எந்தப் புகலிடத்தையும் என்னால் பெற முடியாது’’. (அல் ஜின் : 21- 22).

மனிதர்களுக்கு ஏற்படும் நோய், மரணம், பட்டினி, தாகம் போன்றன அவர்களுக்கும் ஏற்படுகின்றன. இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது இரட்சகனை வர்ணித்ததை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ‘‘அவனே எனக்கு உணவளிக்கின்றான், அவனே எனக்குக் நீர் புகட்டுகிறான், நான் நோயுற்று விட்டால் அவனே என்னைக் குணப்படுத்துகின்றான், மேலும் அவனே என்னை மரணிக்கச் செய்கிறான்; பிறகு அவனே என்னை உயிர்ப்பிப்பான்’’. (அல்ஷுஅரா : 79- 81).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ''நானும் உங்களைப் போன்ற மனிதன்தான், நீங்கள் மறப்பதைப் போன்று நானும் மறக்கின்றேன், அவ்வாறு நான் மறந்தால் எனக்கு நினைவூட்டுங்கள்''.

அல்லாஹ் இறைத்தூதர்களின் உயர்ந்த ஸ்தானத்தை வர்ணிக்கின்ற போதும் அடிமைத்தனத்தைக்கொண்டே அவர்களை வர்ணிக்கிறான். நபி நூஹ் அவர்களைப் புகழும்போது அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : ''நிச்சயமாக அவர் நன்றியுள்ள அடியாராக இருந்தார்''. (அல்இஸ்ராஃ : 03). நபி முஹம்மத் ( ஸல்) அவர்களைப் புகழும்போது அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : ''உலகத்தார் யாவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக (சத்தியத்தையும், அசத்தியத்தையும் தெளிவாகப்) பிரித்தறிவிக்கும் இவ்வேதத்தைத் தன் அடியார் மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன்''. (அல்ஃபுர்கான் : 01).

இப்ராஹீம் (அலை), இஸ்ஹாக் (அலை), யஃகூப் (அலை) ஆகியோர் விடயத்தில் பின்வருமாறு கூறுகின்றான் : (நபியே! ஆத்மீக) ஆற்றலும், அகப்பார்வையும் உடையவர்களாயிருந்த நம் அடியார்களான இப்ராஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோரை நினைவு கூர்வீராக! நிச்சயமாக நாம், மறுமையை நினைவுகூர்வது எனும் ஒரு தூய பண்பு அவர்களிடம் இருந்தமையால் அவர்களைத் தேர்ந்தெடுத்திருந்தோம். நிச்சயமாக இவர்கள் நம்மிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லோர்களில் நின்றுமுள்ளவர்கள்''. (ஸாத் : 45- 47).

ஈஸா (அலை) அவர்கள் விடயத்தில் பின்வருமாறு கூறுகின்றான் : ''அவர் (ஈஸா நம்முடைய) அடியாரே அன்றி வேறில்லை, அவருக்கு

நாம் அருட்கொடையைச் சொரிந்து இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு அவரை நல்லுதாரணமாக ஆக்கினோம்''. (அஸ்ஸுஃக்ருப் : 59).

இறைத்தூதர்களை இறைவிசுவாசிப்பது நான்கு அம்சங்களை உட்பொதிந்துள்ளது :

1. அவர்கள் கொண்டு வந்த தூது அல்லாஹ்விடமிருந்து உண்மையாக அருளப்பட்டது என ஈமான் கொள்ளல் வேண்டும். அவர்களில் ஒருவரின் தூதை மறுத்தால் அனைத்து தூதர்களையும் மறுத்தவராவார். இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான் : ''நூஹின் சமூகத்தவர் தூதர்களைப் பொய்ப்பித்தனர்''. (அஷ்ஷுஅராஃ : 105). அச்சமூகத்தினர் நபி நூஹ் அவர்களைப் பொய்ப்பித்த வேளை வேறு தூதர்கள் யாருமில்லாமிலிருந்தும் அனைத்துத் தூதர்களையும் நிராகரித்தவர்களாகவே அல்லாஹ் அவர்களை ஆக்கியுள்ளான். இதன்படி முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றாது பொய்ப்பித்த கிறிஸ்தவர்கள், ஈஸா (அலை) அவர்களையும் பின்பற்றாது அவர்களையும் சேர்த்தே பொய்ப்பிக்கின்றனர். அவர்களுக்கு ரஸூல் (ஸல்) அவர்களது வருகை பற்றி முன்னறிவிப்பு செய்தே இருந்தார்கள். அதாவது அல்லாஹ் அவர்களை வழிகேட்டில் இருந்து காத்து நேர்வழியின் பால் இட்டுச் செல்ல அனுப்பப்பட்ட தூதரே இவர் என்பதைத் தவிர இந்த முன்னறிவிப்பிற்கு வேறு அர்த்தம் கிடையாது.

2. அவர்களில் முஹம்மத் (ஸல்), இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), நூஹ் (அலை) என பெயர் குறிப்பிடப்பட்டவர்களை அவர்களுடைய பெயர்களுடன் ஈமான் கொள்ளல் வேண்டும். இந்த ஐவரும் உலுல் அஸ்ம் (மன

உறுதிமிக்க இறைத்தூதர்கள்) என்ற சிறப்பை பெற்றவர்களாவர். இவர்களை அல்லாஹ் தனது திருக்குர்ஆனில் இரு இடங்களில் ஒன்றாகவே கூறியுள்ளான் : ''(நபியே! நம் தூதை எடுத்துரைக்கும்படி பொதுவாக) நபிமார்களிடமும் (சிறப்பாக) உம்மிடமும், நூஹ், இப்ராஹீம், மூஸா, மர்யமுடைய மகன் ஈஸாவிடமும் வாக்குறுதி வாங்கியதை நினைவு கூர்வீராக, மிக்க உறுதியான வாக்குறுதியையே இவர்களிடமும் நாம் எடுத்திருக்கிறோம்''. (அல்அஹ்ஸாப் : 7). ''நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்றாஹீமுக்கும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்; ''நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்' என்பதே – இணைவைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ, அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது – தான் நாடியவர்களை அல்லாஹ் தன் பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான் – (அவனிடம்) மீள்வோருக்கு தன்பால் நேர் வழியும் காட்டுகிறான்''. (ஷூரா : 13). அவர்களில் நாம் பெயரறியாதோரைப் பொதுப்படையாக நம்ப வேண்டும். அல்லாஹ் கூறுகிறான் : ''திட்டமாக நாம் உமக்கு முன்னர் தூதர்களை அனுப்பியிருக் கின்றோம்; அவர்களில் சிலருடைய வரலாற்றை உமக்குக் கூறியுள்ளோம், இன்னும் எவர்களுடைய வரலாற்றை உமக்குக் கூறவில்லையோ (அவர்களும்) அத்தூதர்களில் இருக்கின்றனர்''. (ஃகாபிர் : 78).

3. அவர்கள் கொண்டு வந்த செய்திகளில் ஆதாரபூர்வமானதை உண்மை என ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. அவர்களில் எமக்கு அனுப்பப்பட்ட தூதர் கொணடு வந்த சட்டத்தின் (ஷரீஆவின்) படியே செயல்பட வேண்டும். அவர்தான் அனைத்து மக்களுக்கும் அனுப்பப்பட்ட இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களாவர். அல்லாஹ் கூறுகிறான் : ''உமதிரட்சகன் மீது சத்தியமாக! அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில் உம்மை நீதிபதியாக நியமித்து, நீர் செய்யும் தீர்ப்பை தங்கள் மனதில் எத்தகைய அதிருப்தியுமின்றி முற்றிலுமாக ஏற்காதவரை அவர்கள் (உண்மை) நம்பிக்கையாளர்களாக ஆகமாட்டார்கள்''. (அன்நிஸாஃ : 65).

இறைத்தூதர்களை ஈமான் கொள்வதால் மகத்தான பல பயன்கள் கிடைக்கின்றன, அவற்றில் சில :

1. அல்லாஹ்வினது அருளையும், அவன் தனது அடியார்கள் மீது கொண்டுள்ள கரிசனையையும் உணர முடிகிறது. மனித அறிவால் நேர்வழியை சுயமாக விளங்கிக் கொள்ள முடியாது என்பதனால் அல்லாஹ் தனது தூதர்களை மக்களை நேர்வழிப்படுத்த அனுப்பினான். அவனை வணங்குவது எப்படி என்று அவர்களே தெளிவுபடுத்தினர். இது அவன் அவர்கள் மீது கொண்ட கரிசனையின் வெளிப்பாடே அன்றி வேறில்லை.

2. அளப்பரிய இந்த அருளை வழங்கியதற்காக அவனுக்கு நன்றி கூற முடிகிறது.

3. அவர்கள் மீது அன்பு கொள்ளவும், அவர்களை கண்ணியப்படுத்தவும், அவர்களது தகுதிக்கு ஏற்ற விதத்தில் அவர்களைப் புகழவும் முடிகிறது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் தூதர்கள் என்பதாலும், அவர்கள் அல்லாஹ்வை உறிய முறையில் வணங்கி, அவனது தூதை எத்திவைத்து, அது

பற்றி மக்களுக்கு உபதேசம் புரிபவர்களாகவும் இருந்துள்ளனர்.

பிடிவாதக்காரர்கள் இறைத்தூதர்கள் மனிதர்களாக வர முடியாது எனக் கூறி அவர்களை பொய்ப்பித்தனர். இவர்களது இக்கருத்தை நிராகரித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: ''மனிதர்களிடம் நேர்வழி வந்த போது, ''ஒரு மனிதரையா அல்லாஹ் (தன்) தூதராக அனுப்பினான்'' என்று கூறுவதைத் தவிர அவர்கள் ஈமான் கொள்வதை வேறெதுவும் தடுக்கவில்லை. (நபியே!) : ''பூமியில் மலக்குகள் (வசித்து) இருந்து, (அதில்) அவர்கள் நிம்மதியுடையோராக நடந்து திரிந்து கொண்டிருந்தால், நிச்சயமாக நாம் வானத்திலிருந்து ஒரு மலக்கையே (நம்முடைய) தூதராக அவர்களிடம் இறக்கி வைத்திருப்போம், (எனினும், அவர்கள் மனிதர்களாக இருப்பதனால் ஒரு மனிதரே தவிர அவர்களுக்குத் தூதராக வர மாட்டார்) என்று நீர் கூறும்''. (அல்இஸ்ராஃ : 94, 95). பூமியிலுள்ளவர்கள் மனிதர்களாக இருக்கும் போது அவர்களுக்கு அனுப்பப்படும் தூதரும் மனிதராக இருப்பதே அவசியமெனக் கூறி அல்லாஹ் இவர்களது வாதத்தை நிராகரிக்கின்றான். பூமியிலுள்ளவர்கள் மலக்குகளாக இருந்தால் அல்லாஹ் அவர்களது சுபாவத்திற்கேற்ப வானிலிருந்து மலக்கொருவரைத் தூதராக அனுப்பி இருப்பான். இவ்வாறே இறைத்தூதர்களைப் பொய்ப்பித்தவர்கள் கூறியதாக பின்வரும் செய்தியை அல்லாஹ் கூறுகின்றான் : ''நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்களேயன்றி (வேறு) இல்லை, எங்களுடைய மூதாதையர்கள் வணங்கிக் கொண்டிருந்தவற்றை விட்டும் எங்களைத் தடுக்கவா நீங்கள் விரும்புகிறீர்கள்? அப்படியானால், எங்களுக்குத் தெளிவான ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்'' எனக் கூறினார்கள். (அதற்கு) அவர்களிடம் வந்த தூதர்கள் அவர்களை நோக்கி, ''நாங்கள் உங்களைப் போன்ற மனிதர்களே அல்லாமல் வேறில்லை; எனினும் அல்லாஹ் தன் அடியார்களில் தான் நாடியவர் மீது

அருள் புரிகிறான்; அல்லாஹ்வின் அனுமதியின்றி நாங்கள் உங்களுக்கு எந்த ஓர் ஆதாரத்தையும் கொண்டு வருவதற்கில்லை''. (இப்ராஹீம் : 10, 11).

## இறுதி நாளை விசுவாசம் கொள்ளுதல்

இறுதி நாள் என்பது விசாரணைக்காகவும், கூலி வழங்கப் படுவதற்காகவும் மக்கள் மீளெழுப்பப்படும் நாளாகும்.

சுவனவாதிகள் தமது இருப்பிடங்களிலும், நரக வாதிகள் தமது இருப்பிடங்களிலும் நிலையாகத் தங்கும் அந்நாளிற்குப் பிறகு வேறு நாளில்லை என்பதனாலேயே இறுதி நாள் எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இறுதி நாளை ஈமான் கொள்வது மூன்று அம்சங்களை உட்பொதிந்துள்ளது :

1. மீள எழுப்பப்படுவதை ஈமான் கொள்ளல்:- இரண்டாவது ஸூர் ஊதப்பட்டதும் இறந்தவர்களுக்கு மீண்டும் உயிரளிக்கப்படுவதையே இது குறிக்கின்றது. அவ்வாறு உயிரளிக்கப்பட்டதும் அனைத்து மனிதர்களும் பாதணியற்றவர்களாகவும், நிர்வாணமானவர்களாகவும், கத்னா செய்யப்படாதவர்களாகவும் இறைவன் முன்வந்து நிற்பார்கள். அல்லாஹ் கூறுகின்றான் : ''முதல் தடவை நாம் அவர்களை படைத்தது போன்றே (அந்நாளில்) நாம் (அவர்களுக்கு உயிர் கொடுத்து) அவர்களை மீளவைப்போம். இது நம்மீது கட்டாயமான வாக்குறுதியாகும். நிச்சயமாக நாம் இதைச் செய்தே தீருவோம்''. (அல்அன்பியாஃ : 104).

அல் குர்ஆன், அஸ்ஸுன்னா, மற்றும் அனைத்து முஸ்லிம்களினதும்

ஏகமான கூற்றின்படியும் மீள எழுப்பப்படுவது நிச்சயம் நிகழக்கூடிய ஒன்றே.

அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘பிறகு, நிச்சயமாக நீங்கள் மரணிப்பவர்களாக இருக்கிறீர்கள். அதற்குப் பின்னர் மறுமைநாளில் நிச்சயமாக நீங்கள் (உயிர் கொடுத்து) எழுப்பப்படுவீர்கள்’’. (அல்முஃமினூன் : 15, 16).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ‘‘மறுமை நாளில் மனிதர்கள் பாதணியற்றவர்களாகவும், நிர்வாணமானவர்களாகவும், கத்னா செய்யப்படாதவர்களாகவும் எழுப்பப்படுவர்’’. (புஹாரி, முஸ்லிம்)

இந் நிகழ்வு நிகழுமென அனைத்து முஸ்லிம்களும் ஏகோபித்துச்சொல்லியுள்ளனர். இதுவே மதிநுட்பம் வேண்டி நிற்கும் ஒரு அம்சமாகும், ஏனெனில் இந்தப் படைப்பினங்களுக்கு ஒரு மீள் நாளை ஏற்படுத்தி, தூதர்கள் மூலம் அவர்களுக்கு வழிகாட்டப்பட்ட விடயங்களில் விசாரிக்கப்பட்டு, அதற்கமைவாக கூலி கொடுக்கப்படவேண்டுமென்பது மதிநுட்பம் வேண்டி நிற்கும் ஒரு அம்சமே. அல்லாஹ் கூறுகின்றான் : “‘நாம் உங்களை படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடம் மீட்டிக்கொண்டு வரப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டிருந்தீர்களா?” (என்று கேட்பான்.)’’. (அல்முஃமினூன் : 115). மேலும் நபி (ஸல்) அவர்களைப் பார்த்துக் கூறுகின்றான் : ‘‘(நபியே!) நிச்சயமாக எவன் இந்த குர்ஆனை உம்மீது விதியாக்கினானோ, அவன் நிச்சயமாக உம்மைத் திரும்பிக் கொண்டு வந்து அம்மீளும் தலத்தில் சேர்ப்பிப்பான்’’. (அல்கஸஸ் : 85).

2. விசாரணை மற்றும் கூலி வழங்குவதை ஈமான் கொள்ளல்:- அடியான்

தனது செயல்களுக்காக விசாரனை செய்யப்பட்டு, அதற்கேற்ப கூலியும் கொடுக்கப்படுவான். இதனை அல் குர்ஆனும், ஸுன்னாவும், அனைத்து முஸ்லிம்களினது ஒருமித்த கருத்தும் அறிவித்துள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘நிச்சயமாக அவர்களின் மீட்சி நம் பக்கமேயாகும். பின்னர், நிச்சயமாக அவர்களைக் கேள்வி கணக்கு கேட்பதும் நம்மீதேயாகும்’’. (அல்ஃகாஷியா : 25, 26). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘எவர் ஒருவர் நன்மையைச் செய்கிறாரோ அவருக்கு அதைப்போல் பத்து பங்கு (நன்மை) உண்டு. எவர் ஒருவர் ஒரு தீமையைச் செய்கிறாரோ, அதைப் போன்றதேயன்றி (அதிகமாக) அவருக்குக் கூலி கொடுக்கப்படமாட்டாது. (குற்றத்திற்கு அதிகமான தண்டனையைக் கொடுத்தோ அல்லது நன்மைக்குரிய கூலியைக் குறைத்தோ) அவர்கள் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்.’’. (அல்அன்ஆம் : 160). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘மறுமை நாளில் நீதமான தராசுகளையே நாம் நிறுத்துவோம். எந்த ஓர் ஆத்மாவும் சிறிதளவும் அநியாயம் செய்யப்பட மாட்டாது. (நன்மையோ தீமையோ) ஒரு கடுகின் வித்தளவு இருந்தபோதிலும் அதையும் கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதும். (வேறெவரின் உதவியும் நமக்குத் தேவையில்லை)’’. (அல்அன்பியாஃ : 47). நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (ரலி) கூறினார்கள் : ‘‘அல்லாஹுதஆலா ஒரு முஃமினைத் தன் பக்கம் நெருங்கச் செய்து, அவன் மீது தன் திரையைப் போட்டு அவனை மறைத்து விடுவான். பிறகு அவனை நோக்கி, ‘நீ செய்த இன்ன பாவம் உனக்கு நினைவிருக்கிறதா?’ என்று கேட்பான். அதற்கு, அவன் ‘ஆம், என் இறைவா!’ என்று கூறுவான். (இப்படி ஒவ்வொரு பாவமாக எடுத்துக் கூறி) அவன் (தான் செய்த) எல்லாப் பாவங்களையும் ஒப்புக் கொள்ளச் செய்வான். அந்த இறைநம்பிக்கையாளர், ‘நாம் இத்தோடு ஒழிந்தோம்’ என்று தன்னைப்

பற்றிக் கருதிக் கொண்டிருக்கும்போது இறைவன், 'இவற்றையெல்லாம் உலகில் நான் பிறருக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருந்தேன். இன்று உனக்கு அவற்றை மன்னித்து விடுகிறேன்' என்று கூறுவான். அப்போது அவனுடைய நற்செயல்களின் பதிவேடு அவனிடம் கொடுக்கப்படும். ஆனால் நிராகரிப்பாளர்கள், நயவஞ்சகர்களைப் பொறுத்தமட்டில் அவர்களை அனைத்து படைப்பினங்கள் முன்னிலையிலும் அழைக்கப்பட்டு, 'இவர்கள் தான், தம் இறைவன் மீது பொய்யைப் புனைந்துரைத்தவர்கள்! இத்தகைய அக்கிரமக்காரர்களின் மீது இறைவனின் சாபம் உண்டாகட்டும்' என்று சொல்லப்படும்''. (புஹாரி, முஸ்லிம்)

ஒருவர் ஒரு நல்ல செயலைச் செய்ய நினைத்து, அதைச் செய்தும் முடிப்பாரேயானால் அல்லாஹ் அதை பத்து முதல் எழுநூறு தடவை அல்லது அதற்கும் பன்மடங்கு அதிகமானதாக தன்னிடத்தில் எழுதிக் கொள்கின்றான். ஒருவர் ஒரு தீய செயலைச் செய்ய நினைத்து, அதை செய்தும் முடித்தால் அல்லாஹ் அதை ஒரு தீய செயலாக மட்டுமே எழுதிக் கொள்கின்றான் என நபி (ஸல்) அவர்கள் கூறிய செய்தி ஆதாரபூர்வமாகப் பதிவாகியுள்ளது.

அடியார்களின் செயற்பாடுகள் குறித்து விசாரணை செய்யப்பட்டு அதற்கேற்ப கூலியளிக்கப்படுவதை அனைத்து முஸ்லிம்களும் ஏகமானதாக உறுதிப்படுத்தியுள்ளனர். இதுவே மதிநுட்பத்தின் தேற்றத்திற்குட்பட்டதாகும். ஏனெனில் அல்லாஹ் வேதங்களை அருளியுள்ளான், தூதர்களை அனுப்பியுள்ளான். அவர்கள் கொண்டுவந்தவற்றை ஏற்று அமுல்படுத்தும்படி அடியார்களைப் பணித்துள்ளான். அவனுக்கு முரண்படுவோருடன் போரிடுவதை கடமையாக்கியுள்ளான். அவர்களுடைய உயிர், உடமை, மனைவி, சந்ததிகளை அபகரிப்பதை அனுமதித்துள்ளான். அங்கு விசாரணையோ, கூலி வழங்கலோ இல்லாவிடில் மதிநுட்பம் மிக்க அல்லாஹ் எதனை

விட்டும் தூய்மைப்படுத்தப்படுகிறானோ அத்தகைய வீண் விடயங்களில் இது ஒன்றாகிவிடும். இதனையே அல்லாஹ் பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றான் : ''யாருக்கு (நம்) தூதர்கள் அனுப்பப்பட்டார்களோ அவர்களைத் திடனாக விசாரணை செய்வோம். இன்னும் (நம்) தூதர்களையும் திடனாக விசாரிப்போம். (அவர்களின் செயலைப்பற்றி நாம் நன்கறிந்துள்ளவாறு நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கூறிக்காண்பிப்போம், (அவர்கள் செய்ததை விட்டும்) நிச்சயமாக நாம் மறைவாக இருக்கவில்லை''. (அல்அஃராப் : 6,7).

3. சுவர்க்கம், நரகத்தையும் அவ்விரண்டுமே படைப்பினங்களது நிரந்தர இருப்பிடம் எனவும் ஈமான் கொள்ளல்:-

அல்லாஹ் ஈமான் கொள்ளுமாறு ஏவிய விடயங்களை ஈமான் கொண்டு அவனுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு, அவனை தூய்மையுடன் வழிப்பட்டு, அவனது தூதரை பின்பற்றி இறையச்சத்துடன் வாழ்ந்த நல்லடியார்களுக்கு தயார் செய்யப்பட்டுள்ள இடமே சுவர்க்கமாகும். அதன் சிறப்பை எந்த கண்களும் அதற்கு முன்னர் பார்த்திருக்கவோ, காதுகளும் கேட்டிருக்கவோ, உள்ளங்கள் கற்பனை செய்து பார்த்திருக்கவோ முடியாத பல இன்பங்கள் அதில் உள்ளன. அல்லாஹ் கூறுகின்றான்: ''நிச்சயமாக, எவர்கள் ஈமான் கொண்டு, (ஸாலிஹான) நல்லமல்கள் செய்கிறார்களோ, அவர்கள் தான் படைப்புகளில் மிகச் சிறந்தவர்கள். அவர்களுடைய நற்கூலி, அவர்களின் இறைவனிடத்தில் உள்ள ''அத்ன்'' என்னும் நிலையான சுவனபதியாகும். அதில் நீரருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருக்கும். என்றென்றுமே அவர்கள் அதில் நிரந்தரமாக தங்கிவிடுவார்கள். அல்லாஹ்வும் அவர்களைப் பற்றி திருப்தியடைவான். அவர்களும் அல்லாஹ்வைப் பற்றி திருப்தி அடைவார்கள்.

எவர் தன் இறைவனுக்குப் பயப்படுகின்றாரோ, அவருக்குத்தான் இத்தகைய பாக்கியம் கிடைக்கும்''. (அல்பய்யினா : 7, 8). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''அவர்கள் செய்த (நற்)காரியங்களுக்குக் கூலியாக நாம் அவர்களுக்காக (தயார்படுத்தி) மறைத்து வைத்திருக்கும் கண் குளிரக்கூடிய (சன்மானத்)தை எவராலும் அறிந்துகொள்ள முடியாது. (அவ்வளவு மேலான சன்மானங்கள் அவர்களுக்கு தயார்படுத்தப்பட்டுள்ளன.)''. (அஸ்ஸஜ்தா : 17). அல்லாஹ்வை நிராகரித்து அவனது தூதர்களுக்கு மாறுசெய்து அநீதி இழைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு தயார் செய்யப்பட்டுள்ள இடமே நரகமாகும். இங்கு வேதனை மாத்திரமே அளிக்கப்படும். அங்கு அளிக்கப்படும் வேதனையும், தண்டனையும் உள்ளங்களால் கற்பனை பண்ண முடியாதளவு கடுமையாக இருக்கும். அல்லாஹ் கூறுகின்றான் : ''தவிர (நரக) நெருப்பிற்கு அஞ்சுங்கள், அது காஃபிர்களுக்காக சித்தம் செய்து வைக்கப்பட்டுள்ளது''. (ஆல இம்ரான் : 131). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''(நபியே!) உமது இறைவனால் அருளப்பட்ட (இவ்வேதமான)து முற்றிலும் உண்மையானது. விரும்பியவர் (இதை) நம்பிக்கை கொள்ளலாம்; விரும்பியவர் (இதை) நிராகரித்துவிடலாம். (அதனால் நமக்கொன்றும் நஷ்டமில்லை. ஆனால் இதை நிராகரிக்கும்) அநியாயக்காரர்களுக்கு நிச்சயமாக நாம் நரகத்தைத்தான் தயார்படுத்தி உள்ளோம். அந்நரகத்தின் சுவாலைகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அவர்கள் (தண்ணீர் கேட்டு) அபயமிட்டால் காய்ந்து உருகிய செம்பைப் போலுள்ள நீரே அவர்களுக்குக் கொடுக்கப்படும். (அவர் அதைக் குடிப்பதற்கு முன்னதாகவே) அது அவர்களுடைய முகத்தைச் சுட்டுக் கருக்கிவிடும். அன்றி அது மிக்க (அருவருப்பான) கெட்ட குடிபானமாகும். அவர்கள் இளைப்பாறும் இடமும் மிகக் கெட்டதாகும்''. (அல்கஹ்ப் : 29). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''மெய்யாகவே அல்லாஹ் நிராகரிப்பவர்களைச் சபித்து, கொழுந்து விட்டெரியும்

நெருப்பை அவர்களுக்கு தயார்படுத்தி வைத்திருக்கின்றான். அவர்கள் என்றென்றும் அதில்தான் தங்கிவிடுவார்கள். (அவர்களை) பாதுகாத்துக் கொள்பவர்களையும் (அவர்களுக்கு) உதவி செய்பவர்களையும் அங்கு அவர்கள் காணமாட்டார்கள். நரகத்தில் அவர்களுடைய முகங்களை புரட்டிப் புரட்டிப் பொசுக்கும் நாளில் ''எங்களுடைய கேடே! நாங்கள் அல்லாஹ் வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டிருக்க வேண்டாமா?'' என்று கதறுவார்கள்''. (அல்அஹ்ஸாப் : 64- 66).

மறுமையை ஈமான் கொள்வதால் மகத்தான பல பயன்கள் கிடைக்கின்றன, அவற்றில் சில :

1. இறுதி நாளின் போது கிடைக்கவிருக்கும் கூலியை ஆதரவு வைத்து அல்லாஹ்விற்கு முற்றிலும் வழிப்படுவதற்கு ஆசையேற்படுகிறது.

2. அந் நாளின் தண்டனையைப் பயந்து பாவங்களை வெறுத்தும் ஒதுங்கியும் வாழத் தூண்டுகிறது.

3. மனிதன் விரும்பக் கூடிய ஒன்றை உலகில் இழந்து விட்டால் அதை விட சிறப்பான இன்பத்தை, கூலியை மறுமையில் இறைவனிடம் பெறலாம் என்று ஆறுதல் பெறச் செய்கிறது.

எனினும் இது சாத்தியமில்லை எனக்கருதி இறை மறுப்பாளர்கள் மரணத்திற்குப் பின் மீளெழுப்பப்படுவதை நிராகரிக்கின்றனர்.

மார்க்கம், புலனறிவு, பகுத்தறிவு அடிப்படையில் இந்த வாதம் தவறானதாகும்.

மார்க்கரீதியான ஆதாரத்திற்கு பின்வரும் இறைவசனத்தை கூறலாம் : (மரணித்த பின்னர் உயிர் கொடுத்து) எழுப்பப்பட மாட்டோம் என்று நிச்சயமாக நிராகரிப்பவர்கள் எண்ணிக்கொண்டு இருக்கின்றனர். (நபியே!) நீர் கூறுவீராக: "அவ்வாறல்ல, என் இறைவன் மீது சத்தியமாக! மெய்யாகவே நீங்கள் எழுப்பப்படுவீர்கள். நீங்கள் செய்து கொண்டிருப்பவற்றைப் பற்றி பின்னர் நீங்கள் அறிவுறுத்தவும்படுவீர்கள். இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதே''. (அத்தஃகாபுன் : 7). அனைத்து வேதங்களும் இதில் ஒன்றுபட்டுள்ளன.

புலனறிவு ரீதியான ஆதாரம் : அல்லாஹ் தனது அடியார்களுக்கு இவ்வுலகிலேயே மரணித்தவர்களை உயிர்ப்பித்துக் காட்டியுள்ளான். ஸூரா பகராவில் ஐந்து உதாரணங்கள் இதற்கு உள்ளன :

1. நபி மூஸா (அலை) அவர்களின் சமூகத்தினர் ''நாம் அல்லாஹ்வை நேரடியாகக் காணாமல் நம்ப மாட்டோம்'' (அல்பகரா : 55) எனக் கூறிய போது அல்லாஹ் அவர்களை மரணிக்கச் செய்து மீண்டும் உயிர்ப்பித்தான். இது பற்றி அல்லாஹ் பனூ இஸ்ரவேலர்களைப் பார்த்து பின்வருமாறு கூறுகின்றான் : ''இன்னும் (இதையும் நினைவு கூறுங்கள்): அன்றி நீங்கள் மூஸாவை நோக்கி ''நாங்கள் அல்லாஹ்வைக் கண்கூடாக காணும் வரையில் உங்களை நம்பமாட்டோம்'' என்று கூறியபொழுது, நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே உங்களை (பூகம்பம் போன்ற) பெரும் சப்தம் பீடித்துக் கொண்டது. நீங்கள் நன்றியுடையோராய் இருக்கும் பொருட்டு, நீங்கள் இறந்தபின் உங்களை உயிர்ப்பித்து எழுப்பினோம்''. (அல்பகரா : 55, 56). 2. கொலை செய்யப்பட்டவர் விடயத்தில் பனூ இஸ்ரவேலர்கள் வாக்குவாதப்பட்ட

சம்பவம். தன்னை யார் கொன்றதென கொல்லப்பட்டவர் அறிவிப்பதற்காக ஒரு மாட்டை அறுத்து, அதன் ஒரு பகுதியால் குறித்த நபரின் சடலத்திற்க்கு அடிக்குமாறு அல்லாஹ் அவர்களுக்குப் பணித்தான். இது பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ''நீங்கள் ஒரு மனிதனை கொன்றீர்கள்; பின் அதுபற்றி (ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டித்) தர்க்கித்துக் கொண்டிருந்தீர்கள்; ஆனால் அல்லாஹ் நீங்கள் மறைத்ததை வெளியாக்குபவனாக இருந்தான் (என்பதை நினைவு கூறுங்கள்). ''(அறுக்கப்பட்ட அப்பசுவின்) ஒரு துண்டால் அ(க்கொலையுண்டவனின் சடலத்)தில் அடியுங்கள்'' என்று நாம் சொன்னோம். இவ்வாறே அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான்; நீங்கள் (நல்ல) அறிவு பெறும் பொருட்டுத் தன் அத்தாட்சிகளையும் அவன் (இவ்வாறு) உங்களுக்குக் காட்டுகிறான்''. (அல்பகரா : 72, 73). 3. மரணத்திற்கு அஞ்சி ஆயிரக்கணக்கானோர் தங்களது வீடுகளிலிருந்து வெளியேறிச் சென்ற சம்பவம். அவர்களை அல்லாஹ் மரணிக்கச் செய்து, மீண்டும் உயிர்ப்பித்தான். இது பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ''(நபியே!) மரணத்திற்குப் பயந்து தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினார்களே, அத்தகையோர்பால், நீர் பார்க்கவில்லையா? அவர்களோ ஆயிரக்கணக்கில் இருந்தனர். அப்போது அல்லாஹ் அவர்களிடம் ''நீங்கள் இறந்துவிடுங்கள்'' எனக் கூறினான், (அவர்கள் இறப்பெய்தி விட்டனர்.) பின்னர், அவர்களை உயிர்ப்பித்தான்; நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது பேரருளுடையன்; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் நன்றி செலுத்துவதில்லை''. (அல்பகரா : 243). 4. வரண்டிருந்த ஒரு கிராமத்திற்கருகில் நடந்து சென்று, இதனை மீண்டும் அல்லாஹ் உயிர்ப்பித்து எவ்வாறு செழிப்பாக்குவான் என்பதை ஆச்சரியத்துடன் பார்த்த ஒருவரின் சம்பவம். அல்லாஹ் அவரை நூறு வருடங்கள் மரணிக்கச் செய்து பின் உயிர்ப்பித்து அவரின் ஆச்சரியத்தைப் போக்கினான். இது பற்றி

அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: ''(நபியே!) அல்லது முகடுகள் இடிந்து வீழ்ந்து கிடந்த ஓர் ஊரினைக் கடந்து சென்ற ஒரு மனிதரின் உதாரணத்தை நீர் கவனிக்க வில்லையா? அவர் ''(முற்றிலும்) அழிந்து போய்விட்ட இந்த ஊர் மக்களை அல்லாஹ் எப்படி மீண்டும் உயிர்ப்பிக்கப் போகிறான்?'' என வினவினார். அதற்கு அல்லாஹ் அவருடைய உயிரைக் கைப்பற்றி நூறாண்டுகள் அவரை உயிரற்றவராய்க் கிடக்கச் செய்தான்! பின்னர் அவரை உயிர்த்தெழச் செய்து வினவினான்: ''நீர் எவ்வளவு காலம் இவ்வாறு கிடந்தீர்?அதற்கு அவர் ''ஒரு நாள் அல்லது சில மணி நேரங்கள் நான் இப்படிக் கிடந்திருப்பேன்'' என்று கூறினார். அல்லாஹ் கூறினான்: ''இல்லை; (இந்நிலையிலேயே) நீர் நூறாண்டுகள் கிடந்தீர்! உம்முடைய உணவையும் பானத்தையும் சற்றுப் பாரும்! அவை சிறிதும் கெட்டுப் போகவில்லை. மேலும் உம்முடைய கழுதையைப் பாரும்! (அதன் எலும்புகள்கூட மக்கிப் போய்விட்டன). உம்மை மக்களுக்கோர் சான்றாக விளங்கச் செய்வதற்காகவே நாம் இவ்வாறு செய்தோம். அந்த எலும்புகளை நாம் எவ்வாறு ஒன்று சேர்த்துப் பின்னர் சதையால் அவற்றைப் போர்த்துகிறோம் என்பதைப் பாரும்! இப்படி, உண்மை அவருக்குத் தெளிவானபோது, ''திண்ணமாக அல்லாஹ் எல்லாப் பொருள்களின் மீதும் பேராற்றலுடையவன் என்பதை நான் அறிகிறேன்'' என்று கூறினார்''. (அல்பகரா : 259). 5. இப்ராஹீம் (அலை) அவர்களின் சம்பவம், மரணித்தவர்களை உயிர்ப்பிக்கும் முறையைத் தனக்குக்காட்டுமாறு அல்லாஹ்விடம் அவர் கேட்ட போது, நான்கு பறவைகளை அறுத்து பல கூறுகளாக்கி சுற்றியுள்ள மலைகளில் அவற்றைப் பிரித்து வைத்து, பின் அவற்றை அழைக்குமாறு அல்லாஹ் அவர்களுக்குப் பணித்தான். அப்போது அக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று கலந்து இப்ராஹீம் (அலை) அவர்களிடம் வேகமாக வந்தன. இது பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ''இப்றாஹீம் (இறைவனை நோக்கி), ''என்

இறைவனே! இறந்தவர்களை நீ எப்படி உயிர்ப்பிக்கிறாய். (அதை) நீ எனக்குக் காண்பி" எனக் கூறியபோது, அவன் (இதை) "நீர் நம்பவில்லையா?" என்று கேட்டான். (அதற்கு) அவர் "நான் நம்பியே இருக்கின்றன். ஆயினும், (அதை என் கண்ணால் கண்டு) என் உள்ளம் திருப்தியடைவதற்காக (அதைக் காண்பி)" எனக் கூறினார். (அதற்கவன்) "நான்கு பறவைகளைப் பிடித்து நீர் அவற்றைப் பழக்கி, பின்னர் (அவற்றைத் துண்டு துண்டாக ஆக்கி) அவற்றில் ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு மலையின் மீதும் வைத்துவிட்டு (நடுவில் இருந்துகொண்டு) அவற்றை நீர் கூப்பிடுவீராக. அவை உம்மிடம் பறந்து வந்து சேரும் (எனக் கூறி, அவ்வாறு செய்து காண்பித்து) "நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன், மிக்க நுண்ணறிவுடையவன் என்பதையும் நீர் உறுதியாக அறிந்து கொள்வீராக" என்றான்''. (அல்பகரா : 260).

இவை மரணித்தவர்களை மீண்டும் உயிர்ப்பிக்கச்செய்ய முடியும் என்பதை அறிவிக்கும் நடைமுறையில் இடம் பெற்ற உணர்ச்சிபூர்வமான உதாரணங்களாகும். ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் உத்தரவின் பேரில் இறந்தவர்களை உயிர் பெறச் செய்யவும், அவர்களை மண்ணறையிலிருந்து வெளியில் கொண்டு வரும் ஆற்றல் பெற்றிருந்த அத்தாட்சிகளை முன்னர் குறிப்பிட்டோம்.

மீள எழுப்பப்படுவதை பகுத்தறிவு ரீதியாக இரண்டு விதங்களில் நிறுவமுடியும் :

1) வானங்கள் பூமி அதிலுள்ளவை அனைத்தையும் அல்லாஹ்வே படைத்தான். இவற்றை ஆரம்பமாக படைக்க ஆற்றல் பெற்றவன் மீட்டெடுக்கவும் ஆற்றல்

பெற்றவனாகவே இருப்பான்? இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான் : ‘‘அவனே முதன்முறையாகப் படைத்து பின்னர் அதனை மீட்டுகிறான். அது அவனுக்கு மிக இலகுவானது’’. (அர்ரூம் :27). ‘‘முதல் தடவை நாம் அவர்களை படைத்தது போன்றே (அந்நாளில்) நாம் (அவர்களுக்கு உயிர் கொடுத்து) அவர்களை மீள வைப்போம். இது நம்மீது கடமையானதொரு வாக்குறுதியாகும். நிச்சயமாக நாம் இதனைச் செய்தே தீருவோம்’’. (அல்அன்பியாஃ : 104). உக்கிப் போன எலும்பை உயிர்ப்பிப்பதை மறுத்தவனுக்கு பின்வருமாறு பதிலளிக்கும்படி அல்லாஹ் ஏவுகின்றான் : ‘‘(நபியே!) அதற்கு நீர் கூறுவீராக: ‘‘முதல் முறையில் அதைப் படைத்தவன் எவனோ அவனே அதை உயிர்ப்பிப்பான். அவனோ எல்லா படைப்பினத்தையும் மிக அறிந்தவன்’’. (யாஸீன் : 79). 2. பூமி காய்ந்து வரண்டு பசுமையான மரங்கள் அற்றிருக்கும் போது அவன் மழையைப் பெய்வித்து மரங்களையும், புற்பூண்டுகளையும் முளைக்கச் செய்து அதற்கு உயிரைக் கொடுத்தான். வரண்ட பூமியை உயிர்ப்பிக்க சக்தியுள்ளவன் மரணித்தவர்களையும் உயிர்ப்பிக்க சக்தியுள்ளவனே. அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘(நபியே! பயிர்கள் கருகி பூமி வெட்ட வெளியாக இருப்பதை நீர்காண்பதும் மெய்யாகவே அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும். அதன் மீது நாம் மழையை இறக்கினால், அது (செடி கொடிகளால்) பசுமையாகி வளர்கிறது. (இவ்வாறு இறந்து போன) பூமியை எவன் உயிர்ப்பிக்கிறானோ அவன்தான் மரணித்தவர்களையும் மெய்யாகவே உயிர்ப்பிப்பான். நிச்சயமாக அவன் (அனைத்தின் மீதும்) பேராற்றலுடையவன்’’. (புஸ்ஸிலத் : 39). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘அன்றியும், வானத்திலிருந்து மிக்க பாக்கியமுள்ள தண்ணீரை (மழையை) நாம் இறக்கி வைத்து, அதைக் கொண்டு தோட்டங்களையும், அறுவடை செய்யப்படும் தானியங்களையும் முளைப்பிக்கிறோம். அடுக்கடுக்கான பாளைகளைக் கொண்ட (குலைகளையுடைய) நெடிய பேரீச்ச

மரங்களையும் (உண்டாக்கினோம்). (அவற்றின் கனிகளை) அடியார்களுக்கு உணவாக (அளிக்கிறோம்), மேலும், அதைக் கொண்டு இறந்து கிடந்த ஊரை (பூமியை) நாம் உயிர்ப்பிக்கிறோம், இவ்விதமே, (இறந்தவர்கள் உயிர்ப்பிக்கப் பெற்று) வெளியேறுதலும் இருக்கிறது''. (காஃப் : 11).

மரணத்திற்குப் பின் நிகழும் அனைத்தையும் ஈமான் கொள்வது இறுதி நாளை நம்பிக்கை கொள்வதில் உள்ளடங்குகின்றது : பின்வரும் நிகழ்வுகளை உதாரணத்திற்கு கூறமுடியும்.

1. மண்ணறையின் சோதனை : இது இறந்தவரிடம் அடக்கம் செய்யப்பட்ட பின்னர் அவருடைய இரட்சகன், மார்க்கம், நபி பற்றி வினவப்படுவதைக் குறிக்கின்றது. விசுவாசிகளை அல்லாஹ் உறுதியான வார்த்தை மூலம் உறுதிப்படுத்துவான். எனது இரட்சகன் அல்லாஹ், எனது மார்க்கம் இஸ்லாம், எனது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் என பதிலளிப்பர். அநீதியிழைத்தவர்களை அல்லாஹ் வழிதவறச் செய்கின்றான். எனவே காபிர் ஆஹ், ஆஹ் எனக்குத் தெரியாது என்றும், நயவஞ்சகன் அல்லது சந்தேகங் கொண்டவன் எனக்குத் தெரியாது, மக்கள் ஏதோ கூறிக் கொண்டிருந்தார்கள், நானும் கூறினேன் என்றும் கூறுவான்.

2. மண்ணறையின் வேதனையும் சுகபோகமும் : நயவஞ்சகர்கள், காபிர்கள் போன்ற அநியாயக்காரர்களுக்கு இங்கு வேதனைகள் உண்டு. அல்லாஹ் கூறுகின்றான் : ''இந்த அநியாயக்காரர்கள் மரண வேதனையில் இருக்கும் போது நீங்கள் அவர்களைப் பார்த்தால், மலக்குகள் தம் கைகளை நீட்டி (இவர்களிடம்) ''உங்களுடைய உயிர்களை வெளியேற்றுங்கள்; இன்றைய தினம் நீங்கள் இழிவுதரும் வேதனையைக் கூலியாகக் கொடுக்கப்படுவீர்கள். ஏனெனில், நீங்கள் உண்மையல்லாததை அல்லாஹ்வின் மீது கூறிக் கொண்டிருந்தீர்கள்;

இன்னும், அவனுடைய வசனங்களை (நம்பாது நிராகரித்துப்) பெருமையடித்துக் கொண்டிருந்தீர்கள்'' (என்று கூறுவதை நீர் காண்பீர்)''. (அல்அன்ஆம் : 93). ஃபிர்அவ்னின் கூட்டத்தாரைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான் : ''காலையிலும், மாலையிலும் அவர்கள் நரக நெருப்பின் முன் கொண்டுவரப்படுவார்கள்; மேலும் நியாயத் தீர்ப்பு காலம் நிலைபெற்றிருக்கும் நாளில் ''ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரைக் கடினமான வேதனையில் புகுத்துங்கள்'' (என்று கூறப்படும்)''. (ஃகாபிர் : 46).

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸைத் பின் ஸாபித் (ரலி) அறிவிக்கும் செய்தி ஸஹீஹ் முஸ்லிமில் இடம்பெற்றுள்ளது : ''நீங்கள் (இறந்தவர்களைப்) புதைக்காமல் விட்டுவிடுவீர்கள் என்ற அச்சம் மட்டும் எனக்கில்லையாயின், நான் செவியுறும் மண்ணறையின் வேதனையை உங்களுக்கும் கேட்கச் செய்யும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தித்து இருப்பேன்'' என்று கூறினார்கள். பிறகு எங்களை நோக்கித் தமது முகத்தைத் திருப்பி, ''நரக நெருப்பின் வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள்'' என்றார்கள். அதற்கு நபித்தோழர்கள், ''நரக நெருப்பின் வேதனையிலிருந்து நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறோம்'' என்று கூறினர். பிறகு ''மண்ணறையின் வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள்'' என்றார்கள். அதற்கு நபித்தோழர்கள், ''மண்ணறையின் வேதனையிலிருந்து நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறோம்'' என்று கூறினர். பிறகு, ''குழப்பங்களில் வெளிப்படையானவை மறைமுகமானவை அனைத்திலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள்'' என்று கூறினார்கள். அதற்கு நபித்தோழர்கள், ''குழப்பங்களில் வெளிப்படையானவை மறைமுகமானவை அனைத்திலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறோம்'' என்று கூறினர். பிறகு,

''தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள்'' என்றார்கள். அதற்கு நபித்தோழர்கள், ''தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறோம்'' என்று கூறினர்''.

மண்ணறையின் இன்பங்கள் உண்மையான விசுவாசிகளுக்கே கிடைக்கும். அல்லாஹ் கூறுகின்றான் : ''நிச்சயமாக எவர்கள்: ''எங்கள் இறைவன் அல்லாஹ்தான்'' என்று கூறி, (அதன் மீது) உறுதியாக நிலைத்து நின்றார்களோ, நிச்சயமாக அவர்கள்பால் மலக்குகள் வந்து, ''நீங்கள் பயப்படாதீர்கள்; கவலைப்படாதீர்கள் – உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள்'' (எனக் கூறியவாறு) இறங்குவார்கள்''. (புஸ்ஸிலத் : 30). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : ''மரணத் தறுவாயில் ஒருவரின் (உயிர்) தொண்டைக் குழியை அடையும் போது – அந்நேரம் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆயினும், நாமோ அவருக்கு உங்களை விட சமீபமாக இருக்கிறோம். எனினும் நீங்கள் பார்க்கிறீர்களில்லை. எனவே, (மறுமையில் உங்கள் செயல்களுக்கு) கூலி கொடுக்கப்பட மாட்டீர்கள் என்று இருந்தால் –நீங்கள் உண்மையாளராக இருப்பின், (அவ்வுயிரை) மீளவைத்திருக்கலாமே! (இறந்தவர் இறை அச்சமுடையவனாக இருந்து அல்லாஹ்வின்) நெருக்கத்தை பெற்றவர்களில் ஒருவராக இருந்தால் அவருக்கு சுகமும், நல்லுணவும் இன்னும் பாக்கியமுள்ள சுவர்க்கமும் உண்டு''. (அல்வாகிஆ : 83– 89).

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : ''விசுவாசி தனது மண்ணறையில் மலக்குகளின் வினாக்களுக்கு பதிலளித்ததும் வானிலிருந்து அல்லாஹ் : ''எனது அடியான் உண்மையுரைத்து விட்டான், சுவனத்திலிருந்து அவனுக்கு விரிப்பை விரித்துக்

கொடுங்கள், சுவனத்திலிருந்து ஆடை அணிவியுங்கள், சுவனத்திலிருந்து ஒரு வாயிலைத் திறந்து விடுங்கள்'' என்று கூறுவான். அப்போது அதிலிருந்து தென்றல் காற்றும், நறுமணமும் அவனை வந்தடையும். பார்வை எட்டுமளவு அவனது மண்ணறை விசாலமாக்கப்படும்''. (இது அஹ்மத், அபூ தாவூதில் இடம் பெற்றிருக்கும் நீண்ட ஹதீதின் ஒரு பகுதியாகும்)

மண்ணறையின் இன்பமும், துன்பமும் நடைமுறைக்கு முரணானது, எனவே அது சாத்தியமற்றது எனக் கூறி, அதனை மறுத்து ஒரு கூட்டத்தார் வழிதவறிச்சென்றுள்ளனர். ஒரு கப்ரைத் திறந்து பார்த்தால் அதிலே வைக்கப்பட்ட உடல் அவ்வாறே இருக்கிறது, அது சுருங்கியோ, விரிந்தோ எவ்வித மாற்றமுமின்றியே இருக்கிறது என்றும் கூறுகின்றனர்.

மார்க்கம், புலனறிவு, பகுத்தறிவின் அடிப்படையில் இந்த வாதம் தவறானதாகும் :

மார்க்க ரீதியாக மண்ணறையின் இன்ப, துன்பங்களை அறிவிக்கக் கூடிய பல ஆதாரங்கள் ஏற்கனவே கூறப்பட்டு விட்டன.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நபிகளார் மதீனாவின் ஒரு சில அடக்கஸ்தலங்களின் பக்கம் சென்றார்கள். அச்சமயம் இருவர் மண்ணறைகளில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் சப்தத்தை செவியுற்றார்கள். ஒருவர் சிறுநீர் கழிக்கும் போது மறைந்து கொள்ளாதவராகவும், அடுத்தவர் கோள் சொல்லித் திரிபவராகவும் இருந்தார் என நபியவர்கள் குறிப்பிட்டார்கள். (ஆதாரம் : புஹாரி). முஸ்லிமின் அறிவிப்பில் சிறு நீர் கழித்து நன்றாக சுத்தம் செய்யாதவராக இருந்தார் என இடம்பெற்றுள்ளது.

புலனறிவு : நித்திரையில் இருக்கக் கூடிய ஒருவர், தான் ஒரு பரந்து விரிந்த ஓரிடத்தில் பல இன்பங்களை அனுபவிப்பது போன்று காண்கிறார். அல்லது ஓர் வறண்ட நெருக்கடியான இடத்தில் வேதனைபடுவது போன்று காண்கிறார். சில வேளை இடையில் கண் விழிக்கிறார். ஆனால் அவர் கண் விழித்ததும் இவற்றை தனது படுக்கையிலே அனுபவித்ததை பார்க்கிறார். உறக்கம் மரணத்திற்கு சமமாகும். இதனாலேயே அல்லாஹ் தூக்கத்திற்கு மரணம் என்று பெயரிட்டுள்ளான். அவன் கூறுகின்றான் : ''மனிதர்கள் இறக்கும்பொழுதும், இறக்காமல் நித்திரையில் இருக்கும் பொழுதும் அல்லாஹ்வே அவர்களுடைய உயிரைக் கைப்பற்றுகிறான். பின்னர், எவர்கள் மீது மரணம் விதிக்கப்பட்டதோ அவர்களுடைய உயிரை(த் தன்னிடமே) நிறுத்திக் கொள்கிறான். மற்றவர்க(ளின் உயிர்க)ளை, குறிப்பிடப்பட்ட காலம்வரை வாழ அவன் அவர்களிடமே அனுப்பிவிடுகிறான். சிந்திக்கக்கூடிய மக்களுக்கு, நிச்சயமாக இதில் பல படிப்பினைகள் இருக்கின்றன''. (அஸ்ஸுமர் : 42). பகுத்தறிவு : சில சமயங்களில் உறங்கிக் கொண்டிருப்பவர் நடைமுறைக்கு ஒத்துப்போகும் உண்மையான கனவைக் காண்பார். சிலவேளை ஒருவர் நபி (ஸல்) அவர்களைக்கூட அவரது பண்புகளுடன் கனவில் காண்பார். யாராயினும் அவ்வாறு நபி (ஸல்) அவர்களைக் கண்டால் அது முற்றிலும் உண்மையானதே. ஆயினும் உறங்குபவர் தனது அறையில் படுக்கை விரிப்பிலேயே இருக்கிறார், தான் கண்ட கனவை விட்டும் வெகு தூரத்தில் இருக்கிறார். உலக நிலமைகளில் இது இடம் பெற சாத்தியமிருப்பின் மறுமையின் நிலைகளில் இடம்பெற சாத்தியம் இருக்காதா?!

ஒரு கப்ரைத் திறந்து பார்த்தால் அதிலே வைக்கப்பட்ட உடல் அவ்வாறே இருப்பதுடன், அது சுருங்கியோ, விரிந்தோ எவ்வித மாற்றமுமின்றியே உள்ளது

என்பதை ஆதாரமாகக் காட்டி இதனை அவர்கள் மறுப்பதற்குப் பல விதங்களில் பதில் கூறலாம், அவற்றில் சில பின்வருமாறு :

1. இது போன்ற அற்பமான, போலியான சந்தேகங்களை வைத்து மார்க்கம் கொண்டுவந்த செய்திக்கு ஒரு போதும் முரண்பட முடியாது. இவ்வாறு முரண்படுபவர் அச்சேந்தேகங்களை முறையாகக் கவனித்தால் அதன் போலித்தன்மையை அறிந்து கொள்வார்.

எத்தனை பேர்தான் சரியான கருத்தை குறைகூறுகின்றனர்!

(ஆனால்) அதன் ஆபத்தோ அவர்களின் தவறான புரிதலினால் ஏற்பட்டதாகும்.

2.பர்ஸஹ் எனும் மறைவான வாழ்வின் நிலைகள் புலனுறுப்புக்களால் அறிய முடியாத மறைவான விடயங்களில் உள்ளதாகும். அவ்வாறு புலனுறுப்புக்களால் அறிய முடியுமாயிருந்தால் மறைவானவற்றை இறைவிசுவாசிப்பதற்கு எப்பயனும் இருக்காது. மறைவானவற்றை விசுவாசிப்போரும், அதனை மறுப்போரும் சமனாகிவிடுவர்.

3. வேதனை, இன்பம், மண்ணறை விசாலம், அதன் நெருக்கடி அனைத்தையும் மரணித்தவர் மாத்திரமே அறிய முடியும். இது நித்திரையில் இருக்கக் கூடிய ஒருவர் தான் ஒரு பரந்து விரிந்த பல இன்பங்கள் நிறைந்த ஓரிடத்தில் இருப்பதைப்போன்று காண்கிறார். அல்லது ஒரு நெருக்கடியான இடத்தில் இருப்பதைப்போன்று காண்கிறார். அவரைச் சூழவுள்ளோர் யாரும் அதனைக் காணவோ, உணரவோ முடியாது என்பதைப் போன்றுதான் இதுவும். நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுக்கு மத்தியில் இருக்கும் போதும் அன்னாருக்கு வஹீ அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும், அதனை அவர் செவிமடுப்பார், தோழர்கள்

செவிமடுக்கமாட்டார்கள். சில வேளை அம்மலக்கு மனித உருவெடுத்து வந்து நபியுடன் உரையாடுவார், தோழர்களோ அவரைக் காணவோ, அவர்கள் பேசுவதைக் கேட்கவோ மாட்டார்கள். 4. படைப்பினங்களின் புரிதல், அல்லாஹ் அவர்களுக்கு புரிந்துகொள்ள வைத்த அளவுடன் வரையறுக்கப்பட்டுள்ளது. அனைத்தையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. ஏழு வானங்கள், பூமி, அவற்றிலுள்ளவை அனைத்தும் அல்லாஹ்வை யதார்த்தமாகவே துதிக்கின்றன. சிலவேளை அல்லாஹ் தனது படைப்பினங்களில் தான் நாடியோருக்கு அதனைக் கேட்கவும் வைக்கிறான். அப்படியிருந்தும் கூட அது எம்மை விட்டும் மறைக்கப்பட்டே உள்ளன. இதுபற்றி அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘ஏழு வானங்களும், பூமியும், அவற்றில் உள்ளவர்களும் அவனைத் துதி செய்து கொண்டிருக்கின்றனர்; இன்னும் அவன் புகழைக் கொண்டு துதி செய்யாத பொருள் (எதுவும்) இல்லை. எனினும் அவை துதி செய்து புகழ்வதை நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்கள்’’. (அல்இஸ்ராஃ : 44). இவ்வாறுதான் ஷைதான், ஜின்களும் பூமியில் நடமாடுகின்றனர், நபி ஸல் அவர்களிடம் ஜின்கள் சமூகமளித்து, அன்னாருடை ஓதலை மௌனம் காத்து, செவிசாய்த்தனர், பின்னர் தமது சமூகத்திற்கு எச்சரிக்கை செய்யச் சென்றனர். அவ்வாறிருந்தும் அவர்கள் எம்மை விட்டும் மறைக்கப்பட்டே இருந்தனர். இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான் : ‘‘ஆதமுடைய மக்களே! ஷைத்தான் உங்கள் தாய் தந்தையை (அவர்கள் இன்பமுடன் வசித்து வந்த) சொர்க்கத்திலிருந்து வெளியேற்றி துன்பத்திற்குள்ளாக்கியது போல உங்களையும் துன்பத்திற்குள்ளாக்கிவிட வேண்டாம். அவர்களுடைய மானத்தை அவர்களுக்குக் காண்பிப்பதற்காக அவன் அவர்களுடைய ஆடையைக் களைந்து விட்டான். நீங்கள் பார்க்க முடியாத இடத்திலிருந்து அவனும், அவனுடைய நண்பர்களும் உங்களைப் பார்க்கின்றார்கள். நிச்சயமாக நம்பிக்கை கொள்ளாதவர்களுக்குத்தான் அந்த

ஷைத்தான்களை நாம் நண்பர்களாக்கி இருக்கிறோம்''. (அல்அஃராப் : 27). படைப்பினங்களால் அனைத்தையும் புரிந்து கொள்ள முடியாதிருக்கும் போது மறைவான விடயங்களில் ஆதாரபூர்வமாக உறுதியான, அவர்களால் புரிந்து கொள்ள முடியாத விடயங்களை மறுக்க முடியாது.

## இறை விதியை ஈமான் கொள்ளல் (நம்புதல்)

அல்லாஹ்வின் முன்னைய அறிவின் படியும், அவனது மதிநுட்பத்திற்கமையவும் அவன் உயிரினங்களில் நிர்ணயித்த விடயங்களையே கதர் என அரபியில் கூறப்படுகின்றது.

விதியை இறை விசுவாசிப்பது நான்கு விடயங்களை உட்பொதிந்துள்ளது :

1. சிறிய பெரிய விடயங்கள் அனைத்தையும் பொதுவாகவும் விவரமாகவும் அல்லாஹ் நன்கறிகிறான் என ஈமான் கொள்ளல்.அவனது செயல்கள், அவனது அடியார்களின் செயல்களோடு தொடர்பு பட்ட அனைத்தும் அவற்றில் உள்ளடங்கும்.

2. அவற்றை அல்லாஹ் பாதுகாக்கப்பட்ட பலகையில் எழுதி வைத்துள்ளான் என ஈமான் கொள்ளல். இந்த இரண்டு விடயங்களையும் அல்லாஹ் கீழ்வருமாறு கூறுகிறான் : ''நிச்சயமாக அல்லாஹ் வானத்திலும் பூமியிலும் இருப்பவற்றை நன்கறிகிறான் என்பதை நீ அறியவில்லையா? நிச்சயமாக இவை (லவ்ஹுல் மஹ்பூல் எனும் ) ஏட்டில் உள்ளது. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு எளிதானதாகும்''. (அல்ஹஜ் : 70)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ரு பின்

ஆஸ் (ரலி) கூறுகின்றார் : "வானங்கள், பூமியைப் படைப்பதற்கு ஐம்பதுனாயிரம் வருடங்களுக்கு முன்னரே அல்லாஹ் படைப்பினங்களின் விதிகளை எழுதி விட்டான்.(அப்போது அவனது அர்ஷ் (அரியசனம்) நீரின் மேலிருந்தது)". (ஆதாரம் : முஸ்லிம்).

3. அனைத்து செயல்களும் அவனது நாட்டப்படியே நடை பெறுகின்றன என ஈமான் கொள்ளல். அவன் செயல் சார்ந்ததும் அவனது படைப்பினங்களின் செயல்கள் சார்ந்த அனைத்தும் அதில் உள்ளடங்கும். அவனது செயல் தொடர்பாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ''மேலும், உம்முடைய இறைவன், தான் நாடியதைப் படைக்கிறான்; (தூதராகத் தான் நாடியோரைத்) தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்''. (அல்கஸஸ் : 68). மேலும் கூறுகின்றான் :''அல்லாஹ் தான் நாடியதை செய்கின்றான்''. (இப்ராஹீம் : 27). மேலும் கூறுகின்றான் : ''அவன் எத்தகையவனென்றால், கர்ப்பப்பைகளில் தான் எவ்வாறு நாடுகிறானோ, அவ்வாறு உங்களை அவன் வடிவமைக்கிறான்''. (ஆல இம்ரான் : 6). படைப்பினங்களது செயல் தொடர்பாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : ''அல்லாஹ் நாடியிருந்தால் அவர்களை உங்கள் மீது சாட்டியிருப்பான்; அப்பொழுது அவர்கள் உங்களை எதிர்த்தே போர் புரிந்திருப்பார்கள்''. (அந்நிஸாஃ : 90). மேலும் கூறுகின்றான் :''(நபியே!) உம்முடைய இறைவன் நாடியிருந்தால் இவ்வாறு அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் – எனவே நீங்கள் அவர்களையும் அவர்களுடைய பொய்க் கூற்றுகளையும் விட்டுவிடுங்கள்''.(அல்அன்ஆம் : 112). 4. அனைத்துப் பொருட்களும், அவற்றின் உள்ளமைகள், பண்புகள், அசைவுகள் உட்பட அனைத்தும் அல்லாஹ்வினால் படைக்கப்பட்டுள்ளன என நம்ப வேண்டும்.அல்லாஹ் கூறுகிறான் : ''அல்லாஹ்வே அனைத்துப் பொருட்களினதும் படைப்பாளன் மேலும் அவை யாவற்றிற்கும் அவனே

பொறுப்பாளான்''. (அஸ்ஸுமர் : 62). மேலும் கூறுகின்றான் :''அவனே ஒவ்வொரு பொருளையும் படைத்தான், பிறகு அதனதன் முறைப்படி அதைச்சரியாக அமைத்தான்''. (அல்ஃபுர்கான் : 2) இப்ராஹீம் (அலை) தனது சமூகத்திற்குக் கூறியதாக அல்லாஹ் கூறுகின்றான் : ''அல்லாஹ்வே உங்களையும் நீங்கள் செய்து கொண்டிருப்பவற்றையும் படைத்தான்'' (அஸ்ஸாஃப்பாத் : 96).

நாம் கூறிய முறைப்படி விதியை இறைவிசுவாசிப்பது அடியானுக்கு அவனது சுய செயல்களில் நாட்டம் கொள்வதற்கோ, அல்லது அவற்றை செய்வதற்கான ஆற்றல் பெற்றிருப்பதற்கோ முடியாது என்ற பொருள் கிடையாது. ஏனெனில் மார்க்கமும், நடைமுறையும் மனிதனுக்கென்று ஆற்றல், விருப்பம், நாட்டங்கள் இருப்பதனையே எடுத்துக்காட்டுகின்றன.

1) மார்க்கம் : நாட்டம் பற்றி அல்லாஹ் கூறுகின்றான் : ''எனவே எவர் நாடுகிறாரோ அவர் தம் இரட்சகனிடம் மீளும்பாதையை எடுத்துக்கொள்வாராக''. (அந்நபஃ : 39) மேலும் கூறுகின்றான் : ''உங்கள் விளைநிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு வாருங்கள்''. (அல்பகரா : 223). ஆற்றல் சக்தி பற்றி அல்லாஹ் கூறும் போது : ''ஆகவே இயன்ற அளவிற்கு அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள், (அவனின் கட்டளைகளுக்கு) செவியும் சாயுங்கள், அவனுக்கு வழிப்படுங்கள்''. (அத்தகாபுன் : 16). மேலும் கூறுகிறான்: ''அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவிற்கும் அதன் சக்திக்குட்பட்டதைத்தவிர சிரமம் கொடுப்பதில்லை. அது சம்பாதித்துக் கொண்ட நன்மை அதற்கே. அது சம்பாதித்த தீமையும் அதற்கே''. (அல்பகரா: 286) நடைமுறை : ஒவ்வொரு மனிதனும் அவனுக்கு நாட்டமும், ஆற்றலும் இருப்பதை நன்கறிவான். இவ்விரண்டின் மூலமும் ஒரு செயலைச் செய்யவோ, அல்லது செய்யாது விடவோ முடியும். அவனது நாட்டத்திற்கு உதாரணமாக அவன் நடப்பதைக் கூறலாம். அவனது நாட்டமின்றி நடைபெறுவதற்கு உதாரணமாக

அவனையறியாமல் அவனது உடம்பில் ஏற்படும் நடுக்கத்தைக் கூறலாம். எனினும் ஓர் அடியானின் நாட்டமும் அதைச் செயல்படச் செய்வதற்கான ஆற்றலும் அல்லாஹ்வின் நாட்டத்தாலும், சக்தியாலும்தான் இடம்பெறுகின்றன. ''இது உங்களில் யார் நேர்வழி நடக்கவிரும்புகிறாறோ அவருக்குரியதாகும், இதை அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் நாடினாலேயன்றி நீங்கள் நாடமாட்டீர்கள்''.(அத்தக்வீர் : 28, 29). மேலும் இப்பிரபஞ்சம் முழுதும் அல்லாஹ்விற்கு சொந்தமானது. அவனது அறிவு, நாட்டமின்றி அதில் எதுவும் நடக்கமாட்டாது.

நாம் கூறிய முறைப்படி விதியை இறைவிசுவாசிப்பது ஒரு அடியானுக்கு கடமையாக்கப்பட்டவற்றை விடுவதற்கோ, அல்லது தடுக்கப்பட்டவற்றை செய்வதற்கோ ஆதாரமாக அமையாது. இந்த எண்ணம் தவறானது என்பதை கீழ்வரக் கூடியவற்றின் மூலம் அறிந்த கொள்ள முடியும் :

1. "அல்லாஹ் நாடியிருந்தால் நாங்களும் எங்கள் மூதாதைகளும், (அல்லாஹ்வுக்கு எதையும்) இணை வைத்திருக்க மாட்டோம்; (புசிக்கக் கூடிய) எதையும் (ஆகாதென) நாங்கள் தடை செய்திருக்க மாட்டோம்" என்று இணைவைத்து வணங்கும் இவர்கள் கூறக்கூடும். (நபியே!) இவ்வாறே இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் நம் வேதனையைச் சுவைக்கும் வரை (நபிமார்களைப்) பொய்யாக்கியே வந்தனர். ஆகவே, (நீர் அவர்களை நோக்கி "இதற்கு) உங்களிடம் ஏதும் ஆதாரமுண்டா? (இருந்தால்) அதை நம்மிடம் கொண்டு வாருங்கள். (உங்களது அர்த்தமற்ற வீணான) எண்ணத்தையல்லாது வேறு எதையும் நீங்கள் பின்பற்றவில்லை, நீங்கள் பொய் வாதமே புரிகின்றீர்கள்'' என்று (நபியே!) நீர் கூறும். (அல்அன்ஆம் : 148). விதியை

ஆதாரமாகக் கொள்ள முடியுமாயிருந்தால் அல்லாஹ் அவர்களுக்கு அவனின் வேதனையைச் சுவைக்கச்செய்திருக்கமாட்டான். 2. ''அல்லாஹ்வின் மீது மனிதர்களுக்கு (சாதகமாக) யாதொரு ஆதாரமும் இல்லாதிருப்பதற்காக, இத்தூதர்களுக்குப் பின்னரும், தூதர்கள் பலரை, (சுவர்க்கத்தைக் கொண்டு) நன்மாராயங் கூறுகின்றவர்களாகவும் (நரகத்தைக் கொண்டு) அச்சமூட்டி எச்சரிக்கின்றவர்களாகவும் (அல்லாஹ் அனுப்பி வைத்தான்). மேலும், அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தோனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான்'' (அந்நிஸாஃ : 165). முரண்படுபவர்களுக்கு விதி ஓர் ஆதாரமாக இருப்பின் தூதர்களை அனுப்புவதன் மூலமும் அவை இல்லாமல் போயிருக்காது. ஏனெனில் அவர்களது வருகைக்குப் பின்னரும் அல்லாஹ்வின் விதியின் பிரகாரம் பாவங்கள் நிகழவே செய்கின்றன. 3. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அலீ பின் அபீ தாலிப் (ரலி) கூறினார்கள் : ''சொர்க்கம் அல்லது நரகத்தில் தம் இருப்பிடம் எழுதப்பட்டிராத எவரும் உங்களில் இல்லை" என்றார்கள். அப்போது கூட்டத்தில் ஒருவர் 'அவ்வாறாயின் (முன்னரே எழுதப்பட்டுவிட்ட விதியை நம்பிக் கொண்டு நல்லறங்கள் ஏதும் புரியாமல்) நாங்கள் இருந்து விடமாட்டோமா? இறைத்தூதர் அவர்களே!" என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள் 'இல்லை நீங்கள் செயலாற்றுங்கள். (நல்லார், தீயார்) அனைவருக்கும் (அவரவர் செல்லும் வழி) எளிதாக்கப்பட்டுள்ளது" என்று கூறிவிட்டு பிறகு 'எவர் (தன் செல்வத்தை நன்மையானவற்றுக்கு) வழங்கி, (அல்லாஹ்வுக்குப்) பயந்து, (இம்மார்க்கத்திலுள்ள) நல்ல காரியங்களை (நல்ல காரியங்களென) உண்மையென ஏற்றுக்கொண்டாரோ அவருக்கு இலேசானதற்கு (சுவர்க்கத்தின் வழியை) நாம் எளிதாக்கித் தருவோம்" எனும் (அல்லைல் : 5-7) வசனங்களை ஓதிக் காட்டினார்கள். (புஹாரி, முஸ்லிம்) -குறித்த ஹதீத் புஹாரியின் வாசகமாகும்-. முஸ்லிமின் அறிவிப்பில் ''ஒவ்வொருவரும் எதற்காகப்

படைக்கப்பட்டுள்ளார்களோ அதன்பால் இலகுபடுத்தப்பட்டுள்ளனர்'' என இடம்பெற்றுள்ளது. எனவே நபியவர்கள் விதியைச் சார்ந்திருப்பதைத் தடுத்து, நற்செயலில் ஈடுபடுமாறு பணித்திருப்பதை இதன் மூலம் அவதானிக்க முடிகின்றது. 4. அல்லாஹ் அடியார்களுக்கு சிலதை ஏவியும், சிலதைத் தடுத்தும் உள்ளான். அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதை பணிக்கவே இல்லை. அல்லாஹ் கூறுகின்றான் : ''ஆகவே இயன்றளவிற்கு அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள், (அவனின் கட்டளைகளுக்கு) செவியும் சாயுங்கள், அவனுக்கு வழிப்படுங்கள்''. (அத்தகாபுன் : 16). மேலும் கூறுகிறான்: ''அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவிற்கும் அதன் சக்திக்கு மேல் சிரமம்கொடுப்பதில்லை''. (அல்பகரா: 286) ஒரு செயலின் மீது அடியான் நிர்ப்பந்திக்கப்பட்டால் விடுபட முடியாத ஒன்றைக் கொண்டு சிரமப்படுத்தப்பட்டவனாக ஆகி விடுவான். இது தவறாகும். இதனால்தான் அறியாமை, மறதி, பலவந்தம் போன்ற காரணங்களால் பாவம் நிகழ்ந்தால் அவன் மீது குற்றமேதுமில்லை, ஏனெனில் அவன் அதில் மன்னிப்பளிக்கப்பட்டவனாக இருக்கிறான்.

5. அல்லாஹ்வின் விதியானது மறைக்கப்பட்ட இரகசியமாகும், நிகழ்ந்ததற்குப் பின்னரே அதனை அவன் அறிகிறான். ஓர் அடியான் தான் செய்யவிருப்பதை நாடுவதானது அவனது செயலை விட முந்தியதாகும். எனவே அச்செயலை அவன் நாடுவது அதுபற்றிய அல்லாஹ்வின் விதியை ஏற்கனவே அறிந்திராத நிலையிலாகும். இச்சமயம் விதியை ஆதாரமாக எடுக்க முடியாது, ஏனெனில் ஒரு மனிதன் தான் அறியாத ஒரு விடயத்தை ஆதாரமாகக் கொள்ள முடியாது.

6. ஒரு நபர் உலக விடயங்களில் தனக்கு எது பொருத்தமானது என்பதில் ஆர்வமாக இருப்பதை நாம் காண்கிறோம்; அவர் அதை உணர்ந்து,

தனக்குப் பொருத்தமானதை அடையும் வரை விதியை ஆதாரமாகக் காட்டி வேறொன்றிற்குத் திரும்பமாட்டார். அப்படியானால், அவர் ஏன் தனது மத விவகாரங்களில் தனக்கு நன்மை பயப்பதை விட்டுவிட்டு அவருக்கு தீங்கு விளைவிப்பதன்பால் சென்று, பின்னர் விதியை ஆதாரமாக பயன்படுத்துகிறார்? இரண்டும் ஒன்றல்லவா?!

அதனைத் தெளிவுபடுத்தும் ஓர் உதாரணத்தை உமக்குக் கூறுகின்றேன்:

ஒரு மனிதனின் முன்னிலையில் இரு பாதைகள் இருப்பதென வைத்துக் கொள்வோம். ஒன்று கொலை, கொள்ளை, மானபங்கப்படுத்தல், அச்சம், பட்டினி நிறைந்த அராஜகமான ஊரிற்குச் செல்லும் பாதை, மற்றது ஒழுங்கமைப்பான, அச்சமற்ற, செலிப்பான வாழ்வுள்ள, உயிர், உடமை, மானத்திற்கு உத்தரவாதமுள்ள ஊரிற்குச் செல்லும் பாதையாகும். இரண்டில் எப்பாதையில் அவன் செல்வான்?

நிச்சயமாக ஒழுங்கமைப்பும் பாதுகாப்புமுள்ள ஊரிற்குச் செல்லும் பாதையில் தான் அவன் செல்வான். எந்த புத்திசாலியும் அராஜகம் மிகுந்த, அச்சமான பாதையில் சென்று விதியை ஆதாரமாகக் காட்டமாட்டான். அப்படியாயின் மறுமை விடயத்தில் மாத்திரம் சுவனப் பாதையை விட்டுவிட்டு நரகப் பாதையில் சென்று அதற்கு விதியை ஆதாரமாகக்காட்டுவது ஏன்? மற்றுமோர் உதாரணம் : ஒரு நோயாளிக்கு மாத்திரை குடிக்கும்படி பரிந்துரைக்கப்படுகின்றது, அவனது உள்ளம் விரும்பாமலும் அதனைக் குடிக்கின்றான். தீங்கிழைக்கும் உணவை விட்டும் தடுக்கப்படுகின்றான், அவனது உள்ளம் அதை ஆசைவைத்தும் விட்டுவிடுகிறான். இவையனைத்தும் ஆரோக்கியம்,

நிவாரணம் கிடைப்பதற்காகவே. விதியை ஆதாரமாகக்காட்டி மாத்திரையை பயன்படுத்தாமல், தீங்குதரும் (தடுக்கப்பட்ட) உணவை உட்கொள்ள முடியாது. அப்படியாயின் மனிதன் ஏன் அல்லாஹ், ரஸூல் ஏவியதை விட்டுவிட்டு, தடுத்ததை செய்து, பின்னர் விதியை ஆதாரமாகக்காட்டுகின்றான்? 7. தான் விட்ட கடமைகளுக்கோ, செய்த தவறுகளுக்கோ விதியை ஆதாரமாகக் காட்டும் ஒருவன் மீது மற்றொருவன் அத்துமீறி அவனது சொத்தை அபகரித்து, மானத்தைப் போக்கிவிட்டு, பின்னர் விதியை ஆதாரமாகக் காட்டி, என்னைக் குற்றம் பிடிக்காதே, அல்லாஹ்வின் விதிப்படிதான் எனது அத்துமீறல் நடந்துள்ளது எனக் கூறினால் பாதிக்கப்பட்ட இம்மனிதன் அவனது ஆதாரத்தை ஏற்கமாட்டானல்லவா?. பிறர் தன்மீது அத்துமீறும் போது விதியை ஆதாரமாக ஏற்காமல், அல்லாஹ்வின் கடமைகளில் தான் அத்துமீறும்போது மாத்திரம் எவ்வாறு அதே விதியை ஆதாரமாகக் காட்டுவது?!.

அமீருல் முஃமினீன் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம் கை துண்டிக்கப்பட வேண்டிய திருடன் ஒருவன் கொண்டு வரப்பட்டான். அவனுடைய கையைத் துண்டிக்குமாறு பணித்த போது, அவன் சற்று பொறுங்கள் அமீருல் முஃமினீன் அவர்களே, நான் அல்லாஹ்வின் விதிப்படியே திருடினேன் எனக் கூறினான். அப்போது உமர் (ரலி) அவர்கள் நாங்களும் அல்லாஹ்வின் விதிப்படிதான் துண்டிக்கிறோம் என பதிலளித்ததாகக் கூறப்படுகிறது.

விதியை ஈமான் கொள்வதால் பல பயன்கள் கிடைக்கின்றன, அவற்றில் சில பின்வருமாறு :

1. ஒரு செயலைச் செய்யும் போது அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளல்.

செய்யும் அச்செயலையே சார்ந்திருக்காமல் அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கின்றன என்ற முடிவிற்கு வர முடிகிறது.

2. ஒரு மனிதனுக்கு அவன் விரும்பியது நிறைவேறும் போது அவனை தற்பெருமை கொள்ளாமல் இருக்கச் செய்கிறது. ஒருவனது நாட்டம் நிரைவேறுவது அல்லாஹ் அவன் மீது புரிந்துள்ள அருளினாலேயாகும். அவனே அந்த நலவுக்கான வெற்றிக்கான கரணங்களை ஏற்படுத்திக்கொடுத்தான். எனவேதான், தற்பெருமை கொள்வது அல்லாஹ்வின் இவ்வருளுக்கு நன்றி செலுத்துவதை மறக்கடிக்கச்செய்து விடுகிறது.

3. அல்லாஹ் விதித்ததே அவன் மீது நடைபெறுகிறது என்பதைக்கொண்டு மனநிம்மதியும், ஆறுதலும் கிடைக்கின்றன. தனக்கு விருப்பமான ஒன்றை இழப்பதாலோ வெறுப்பான ஒன்று நிகழ்வதாலோ கலக்கமடையாதிருக்கச் செய்யும். ஏனெனில் இவை, வானம் பூமி எவனுக்கு சொந்தமோ அந்த அல்லாஹ்வின் விதிப்படியே நிகழ்கின்றன [என மன அமைதி கொள்வான்] எனவே, சந்தேகமின்றி அது நிகழ்ந்தே தீரும். இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான் : ‘‘பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் – அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஹ்ஃபூள்) ஏட்டில் இல்லாமலில்லை; நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும். உங்களுக்கு தவறிவிட்டதின் மீது நீங்கள் கவலைப்படாமலிருப்பதற்காகவும், (அல்லாஹ்வாகிய) அவன் உங்களுக்குக் கொடுத்ததைப் பற்றி நீங்கள் (வரம்புமீறி) மகிழ்ச்சி கொள்ளாதிருப்பதற்காகவும் (இதனை உங்களுக்கு அறிவிக்கின்றான்), கர்வங்கொண்டு, தற்பெருமையடிப்போர் ஒவ்வொருவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை’’. (அல்ஹதீத் : 22, 23). நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் :

''ஓர் இறை விசுவாசியின் காரியங்கள் ஆச்சரியமானவை. அவனது விவகாரம் அனைத்தும் அவனுக்கு நன்மையாகவே அமைந்துவிடுகிறது. இது இறை விசுவாசியைத் தவிர மற்றெவருக்கும் அவ்வாறு அமைவதில்லை. அவனுக்கு மகிழ்ச்சியூட்டும் விடயம் ஏற்பட்டால், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறான். அது அவனுக்கு நன்மையாக அமைகிறது. அவனுக்குத் தீங்கு ஏற்பட்டால் பொறுமை செய்கிறான். அதுவும் அவனுக்கு நன்மையாக அமைகிறது''.

விதி விடயத்தில் இரு பிரிவினர் வழிதவறிச் சென்றுள்ளனர் :

1- ஜபரிய்யாக்கள் : மனிதன் அவனது செயல்களில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளான் அதிலே அவனுக்கு சக்தியோ சுயவிருப்பமோ இல்லை எனக் கூறுவோர்.

2- கதரிய்யாக்கள் : இவர்கள், அடியார்களுக்கு அவர்களது செயல்களில் தனித்துவமான நாட்டமும் சக்தியும் இருக்கிறது, அவற்றில் அல்லாஹ்வின் நாட்டத்திற்கோ, சக்திக்கோ எந்தப்பிரதிபளிப்பும் இல்லை என்கின்றனர்.

ஜபரிய்யா என்ற முதல் பிரிவினர்க்கு மார்க்க ரீதியிலும், நடைமுறை ரீதியிலும் மறுப்பு :

மார்க்க ரீதியிலான மறுப்பு : அல்லாஹ் மனிதனுக்கு நாட்டத்தையும் விருப்பத்தையும் உறுதிப்படுத்தியுள்ளான். மேலும் செயலையும் அவன்பால் இணைத்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: ''உங்களில் இவ்வுலகை விரும்புவோரும் உள்ளனர், மறுமையை விரும்புவோரும் உள்ளனர்''. (ஆல இம்ரான் : 152). மேலும் கூறுகிறான்: ''(நபியே!) இன்னும் நீர் கூறுவீராக: ''உங்கள் இறைவனால் அருளப்பட்ட (இவ்வேதமான)து முற்றிலும்

உண்மையானது. விரும்பியவர் (இதை) நம்பிக்கை கொள்ளலாம்; விரும்பியவர் (இதை) நிராகரித்துவிடலாம். (அதனால் நமக்கொன்றும் நஷ்டமில்லை. ஆனால் இதை நிராகரிக்கும்) அநியாயக்காரர்களுக்கு நிச்சயமாக நாம் நரகத்தைத் தான் தயார்படுத்தி உள்ளோம். அந்நரகத்தின் ஜுவாலைகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும்''. (அல்கஹ்ஃப் : 129). மேலும் கூறுகிறான் : ''எவர் நன்மைகள் செய்கிறாரோ, அது அவருக்கே நன்று. எவர் பாவம் செய்கிறாரோ, அது அவருக்கே கேடாகும். உமது இறைவன் (தன்) அடியார்களுக்குச் சிறிதும் அநியாயம் செய்பவன் அல்லன்''. (புஸ்ஸிலத் : 46).

நடைமுறை ரீதியிலான மறுப்பு : ஒவ்வொரு மனிதனும் அவனுடைய நாட்டத்தோடு செய்யும் செயல்களையும், நாட்டமில்லாமல் நடைபெறும் நிகழ்வுகளையும் பிரித்தறிகிறான். உதாரணமாக உண்ணல், பருகல், வியாபாரம் செய்தல், வாங்குதல் போன்றவை அவனுடைய நாட்டத்தில் நடைபெறுகின்றன. காய்ச்சலால் நடுக்கம் ஏற்படல், உயர்ந்த இடத்திலிருந்து விழுதல் போன்றவை அவனது நாட்டம் விருப்பமின்றி இடம்பெறுகின்றன. முதல் உதாரணத்தில் எந்த நிர்ப்பந்தமுமின்றி அவனுடைய சுயவிருப்பத்தில் நிறைவேற்றுகிறான். இரண்டாவது உதாரணத்தில் அவனுடைய விருப்பமோ நாட்டமோ இல்லாமலேயே அவை நிகழ்கின்றன.

கதரிய்யா என்ற இரண்டாவது பிரிவினருக்கு மார்க்க ரீதியிலும், நடைமுறை ரீதியிலும் மறுப்பு :

மார்க்க ரீதியிலான மறுப்பு : அல்லாஹ்வே அனைத்தையும் படைத்தான். அவனுடைய நாட்டபடியே அனைத்தும் உண்டாகின. மனிதர்களுடைய

செயல்கள் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கின்றன என்பதை அவனது திருமறையில் தெளிவுபடுத்தியுள்ளான் : ''இன்னும், அல்லாஹ் நாடியிருந்தால், அவர்களுக்குப் பின்னருள்ளவர்கள், தங்களிடம் தெளிவான அத்தாட்சிகள் வந்த பின்னரும் சண்டையிட்டுக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள்; ஆனால் அவர்கள் வேறுபாடுகள் கொண்டனர்; அவர்களில் ஈமான் கொண்டோரும் உள்ளனர்; அவர்களில் நிராகரித்தோரும் (காஃபிரானோரும்) உள்ளனர்; அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் (இவ்வாறு) சண்டை செய்து கொண்டிருக்க மாட்டார்கள்; ஆனால் அல்லாஹ் தான் நாடியவற்றைச் செய்கின்றான்''. (அல்பகரா : 253). மேலும் கூறுகிறான் : ''மேலும், நாம் நாடியிருந்தால், (இவர்களில் உள்ள) ஒவ்வோர் ஆத்மாவிற்கும், அதற்குரிய நேர் வழியை நாம் கொடுத்திருப்போம், எனினும் ஜின்களாலும், மனிதர் (களில் உள்ள குற்றவாளி)கள் யாவராலும் நிச்சயமாக நான் நரகத்தை நிரப்புவேன்'' என்று என்னிடமிருந்து வாக்கு (முன்னரே) ஏற்பட்டுவிட்டது''. (அஸ்ஸஜ்தா : 13).

பகுத்தறிவு சார்ந்த மறுப்பு : இப்பிரபஞ்சம் முழுவதிற்கும் இறைவனே சொந்தக்காரன். மனிதனும் இப்பிரபஞ்சத்திற்குள் அடங்குகிறான். எனவே அவனும் அல்லாஹ்வுக்கே சொந்தமானவன். சொந்தக்காரனின் அனுமதியோ நாட்டமோ இன்றி, அவனது கட்டுப்பாட்டிலுள்ளவற்றில் அவ்வடியானுக்கு எதுவொன்றும் செய்ய முடியாது.

## இஸ்லாமிய கொள்கையின் இலக்குகள்

''ஹதஃப்'' எனும் அரபு வார்த்தைக்கு எறிவதற்காக வைக்கப்படும் குறி, அனைத்துவித குறிக்கோள்கள், நோக்கங்கள் என பல அர்த்தங்கள் உள்ளன. இஸ்லாமியக் கொள்கையின் இலக்குகள் என்பது அவற்றைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் உன்னதமான நோக்கங்கள், இலக்குகளைக்குறிக்கினறன. இவை அதிகமாக உள்ளன. அவற்றுள் சில :

1. அல்லாஹ்வை மாத்திரம் வணங்கி, உளத்தூய்மையுடன் செயல்படுதலாகும். ஏனெனில் அவனே படைப்பாளன், அவனுக்கு இணை யாருமில்லை. எனவே நோக்கம், வணக்கம் அனைத்தும் அவனை நோக்கி மாத்திரமே இருப்பது அவசியமாகிறது.

2. இதயத்தில் இந்த நம்பிக்கை இல்லாததால் எழும் குழப்பமான தடுமாற்றத்திலிருந்து பகுத்தறிவையும் சிந்தனையையும் விடுவித்தல். ஏனெனில் இந்நம்பிக்கையில்லாத உள்ளம் ஒன்று எந்தவொரு நம்பிக்கையில்லாது வெறுமையாகி, உணர்வுகளுக்கு மாத்திரம் அடிமையாக இருக்கும், அல்லது பல வழிகெட்ட கோட்பாடுகள் மூட நம்பிக்கைகளில் தத்தளிக்கக் கூடியதாக இருக்கும்.

3. உளவியல் மற்றும் சிந்தனை ரீதியான அமைதி ஏற்படல், உள்ளத்தில் கலக்கமில்லை, சிந்தனையில் தடுமாற்றமில்லை. ஏனெனில் இந்தக் கொள்கை ஒரு விசுவாசியை தனது இரட்சகனுடன் இணைக்கின்றது, நிர்வகிக்கும் இரட்சகனாக, சட்டமியற்றும் தீர்ப்பாளனாக அவனை இவ்வடியான் பொருந்திக் கொள்கின்றான். எனவே அவனது விதியை வைத்து உள்ளம் அமைதியடைகின்றது. இஸ்லாத்திற்காக அவனது உள்ளம் விரிந்து கொடுக்கின்றது. மாற்று வழியொன்றை அவன் தேடமாட்டான்.

4. அல்லாஹ்வை வணங்குவதில், அல்லது படைப்பினங்களுடனான தொடர்பில் நெறிபிறழ்வதிலிருந்து நோக்கம், செயல் ஈடேற்றமடைகின்றன. ஏனெனில் இதன் அடிப்படைகளில் இறைத்தூதர்களை விசுவாசம் கொள்வதும் ஒன்றாகும். அது நோக்கத்திலும் செயலிலும் அனைத்து தீய நோக்கங்களிலிருந்தும் ஈடேற்றம் பெற்ற வழிமுறையை உட்பொதிந்துள்ளது.

5. செயல்களில் உறுதியோடும் தீவிரமாகவும் செயற்படல். அதாவது, ஸாலிஹான நல் அமல் செய்யக் கிடைக்கும் எச்சந்தர்ப்பத்தையும் அல்லாஹ்வின் நற்கூலியை ஆதரவு வைத்து தவறவிடாமலிருப்பார், அதே போல் எங்கு தீங்கு நடக்கக் கண்டாலும் அல்லாஹ்வின் தன்டனையைப்பயந்து அவ்விடத்தை விட்டும் தூரமாகிவிடுவார். ஏனெனில், மறுமையில் மீட்டெழுப்பப்பட்டு பின்னர் நமது செயல்கள் அடிப்படையில் கூலிகள் வழங்கப்படுவதை நம்பிக்கை கொள்வது இஸ்லாமிய அகீதாவின் அடிப்படைகளில் ஒன்றாக இருக்கிறது.
அல்லாஹ் கூறுகிறான் : ''ஒவ்வொருவருக்கும் அவர்களின் செயல்களுக்குத் தக்க உயர்நிலைகள் உண்டு; உம் இறைவன் அவர்கள் செய்கின்ற செயல்களைப் பற்றி கவனமற்றவனாய் இல்லை''. (அல்அன்ஆம் : 132). நபி (ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீதினூடாக இந்த இலக்கை நோக்காகக்கொள்ளுமாறு ஆர்வமூட்டியுள்ளார்கள். ''பலமிக்க இறைவிசுவாசி பலம் குன்றிய இறை விசுவாசியைவிட மிகச்சிறந்தவனும் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவனாக இருக்கிறான். ஆனால் எல்லோரிலும் நன்மை உண்டு. உனக்கு பயன்தரும் விடயங்களில் நீ ஆர்வம் கொள்வீராக. மேலும் அல்லாஹ்வை கொண்டு உதவிதேடுவீராக! மனந்தளர்ந்து விடாதீர். உனக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டு விட்டால் 'நான் இவ்வாறு செய்திருந்தால் இப்படி நடந்திருக்கும்' என்று கூறாதீர்; மாறாக (கதருல்லாஹி வமா ஷாஅ ஃபஅல) இது அல்லாஹ்வின்

விதியாகும், அவன் நாடியது நிகழ்ந்துவிட்டது' என்று கூறுவீராக! ஏனெனில் (லவ்) 'இவ்வாறிந்தால்' அதாவது (இவ்வாறு செய்திருந்தால்) எனும் நிபந்தனைச் சொல்லானது ஷைத்தானின் செயலை திறந்து விடுகிறது'' (ஆதாரம் : முஸ்லிம்). 6. தனது மார்க்கத்தை நிலைநிறுத்தவும், அதன் தூண்களை உறுதிப்படுத்தவும் அனைத்து வகையான அர்ப்பணிப்புக்களையும் செய்யக்கூடிய ஒரு பலமான சமூகத்தை உருவாக்குதல். இப்பாதையில் தமக்கு ஏற்படும் எச்சிரமத்தையும் அச்சமூகம் பொருட்படுத்தவேமாட்டாது. இதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான். ''(உண்மையான) விசுவாசிகள் எத்தகையோரென்றால், அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விசுவாசங்கொண்டு, பின்னர் எவ்வித சந்தேகமும் கொள்ளாது, அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய செல்வங்களாலும், தம் உயிர்களாலும் (ஜிஹாத் எனும்) அறப்போர் செய்தார்களே அத்தகையோர்தாம், அவர்களே (தங்கள் விசுவாசத்தில்) உண்மையாளர்கள்''. (அல்ஹுஜுராத் : 15). 7. தனிநபர் மற்றும் சமூகத்தை சீர்திருத்துவதன் மூலம் ஈருலக வெற்றியையும் கண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளல். இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான் : ''ஆணாயினும் பெண்ணாயினும் எவர் இறைநம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல் புரிகின்றாரோ

அவரை (இவ்வுலகில்) தூய வாழ்வு வாழச் செய்வோம். (மறுமையிலும்) அத்தகையோர்க்கு அவர்களின் உன்னதமான செயல்களுக்கு ஏற்ப நாம் கூலி வழங்குவோம்''. (நஹ்ல் : 97).

இவைதான் இஸ்லாமியக் (அகீதா) கொள்கையின் சில நோக்கங்களாகும். இவற்றை நாமும் அனைத்து முஸ்லிம்களும் அடைய அல்லாஹ்விடம் ஆதரவு வைக்கிறோம். நிச்சயமாக அவன் கொடையாளன், தயாளன். அகிலத்தாரைப்

படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

எமது நபி முஹம்மத் ஸல்) அவர்களின் மீதும், அவர்களின் குடும்பத்தார் தோழர்கள் அனைவர் மீதிலும் அல்லாஹ்வின் ஸலாத்தும், ஸலாமும் உண்டாவதாக

நூலாசிரியரால் எழுதப்பட்ட இவ்வாக்கம் இத்துடன் முடிவுற்றது.

முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன் (ரஹ்)

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 03 |
| இஸ்லாமிய மார்க்கம் | 06 |
| இஸ்லாத்தின் அடிப்படைகள் | 10 |
| இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகள் | 15 |
| அல்லாஹ்வை நம்புதல் ( ஈமான் கொள்ளுதல்) | 16 |
| மலக்குமார்களை விசுவாசம் கொள்ளல். | 34 |
| வேதங்களை விசுவாசம் கொள்ளல் | 40 |
| இறைத்தூதர்களை நம்புதல் (ஈமான் கொள்ளல்) | 42 |
| இறுதி நாளை விசுவாசம் கொள்ளுதல் | 50 |
| இறை விதியை ஈமான் கொள்ளல் (நம்புதல்) | 69 |
| இஸ்லாமிய கொள்கையின் இலக்குகள் : | 81 |